
கருவெளி ராச.மகேந்திரன்
நிலவும் நீயும் நானும்
கவிதை தொகுப்பு 4
பூமியின் ஒற்றை நிலவோடு நமக்கான அனுபவங்களை சுமந்து வரும் உணர்வுகளின் தொகுப்பு
கருவெளி கலையகம் வெளியீடு | 94455 28556

நிலவும் நீயும் நானும்

தொகுப்பு 4

பூமியின் ஒற்றை நிலவோடு நமக்கான அனுபவங்களை சுமந்து வரும் உணர்வுகளின் தொகுப்பு

கருவெளி ராச.மகேந்திரன்

தேனி

நூலின் பெயர்: நிலவும் நீயும் நானும் (கவிதைகள்) தொகுப்பு 4 | **ஆசிரியர்** : கருவெளி ராச.மகேந்திரன் | **விலை** : 101 வது பக்கத்தை பார்க்கவும் | **வகை** : இபுத்தகம் | முதல் பதிப்பு : 14 பிப்ரவரி, 2019

Book Name : Nilavum Neeyum Naanum (Kavithaikal) Thoguppu 4 | **Author :** Karuveli RaSa. Mahendran | **M.R.P. :** Check Page Number 101 | **Category:** EBook | First Edition : 14 Feb, 2019

வடிவமைப்பு மற்றும் வெளியீடு :

ரா.மகேந்திரன், கருவெளி கலையகம், தேனி -625531

karuveli.mahendran@gmail.com | **94455 28556** | **https://www.karuveli.wordpress.com**

அனைத்து

ஜீவன்களுக்கும்

சமர்ப்பணம்

நிலவோடு பயணிக்க

நிலாவோடு கூட்டாஞ்சோறு

ஒன்றாய் வாய்த்தால்

சொல்லி விட்டு

நிலவும் நிலாவும் சாந்தினியும்

இருக்குதடி!

சுமை தாங்கி நான்

என் இதழ்களில்

நிலவும் அவனும் கண்ணம்மாவும்

வருமோ?

நீயின்றி.. நிலவின்றி..

நீங்கா நிலவும் நிலாவும்

அவள் நிலாக்கள்!

நிலாத் துளிகள்

நிலவு நிலவாயிருக்கட்டும்

வேறென்ன வேண்டும் எனக்கு?

எங்கும் நிறைந்திருக்கிறார்கள்

குட்டி நிலா!

காத்திருப்பு..

நிலாப் பாதை!

நிலவில்லா வானம்!

நிலா என் இரசிகை

நிலவு நிலவல்ல..

நிலவும் நிலாவும் கன்னத்துக்குழிகளும்!

நிலவும் நாங்களும் காலமும்

முப்பொழுதும் நிலாவுக்குப் புதிரவன்

கவனங்கள் தேவை..

நிலவும் நிலாவும் கலைஞனும்

அவள் இதழ் வரைந்த

கருவெளி ராச.மகேந்திரன்

மதியின் படை

கவி நிலவனும் மதிமாறனும்

நிலவும் நிலாவும் வெண்ணிலா பாட்டி!

நிலவும் அவளும் நானும்

இரகசியம் இது!

நிலவும் கவினும் நானும்

மண்ணாத்தாள்!

"நிலவும் நீயும் நானும்" பற்றி

நிலவும் நீயும் நானும் முதல் மூன்று பாகங்களை நீங்கள் அனைவரும் இரசித்திருப்பீர்கள். அதன் தொடர்ச்சியான **"நிலவும் நீயும் நானும்"** நான்காம் பாகத்திலும், நான் முதல் பாகத்தில் உங்களுடன் பகிர்ந்து கொண்டிருந்த எச்சரிக்கையான **"இந்த தொகுப்பை வாசிக்கும் போது, நிலவு நிலவாக இருக்கட்டும், நீங்கள் நீயாகவோ, நானாகவோ இருங்கள்"** என்பதனை உங்கள் முன் வைக்கிறேன். அதன் அர்த்தம் தானே தன் பொருளை விளக்கி கொள்ளும் களமாக அமைய துவங்கி இருக்கிறது இந்தக் களம். வாருங்கள் (சு)வாசிப்போம் இரசித்தபடியே, களமாடியபடியே !

நான் முன்பு உங்களுடன் பகிர்ந்த கொண்டபடி, இதனை வெறும் கவிதைத் தொகுப்பு என்று முடித்து விட எனக்கே மனமில்லை. ஆகையால் தொடர்ந்து நிலவுடன் நீங்களும் நானும் பயணித்துக் கொண்டே இருப்போமென நம்புகிறேன். முன்பு உறுதியளித்தபடி 2018ல் மூன்று தொகுப்புகளையும் கொண்டு வந்து சேர்த்த மகிழ்ச்சியைப் போல், 2019ல் இரண்டு பாகங்களை கொண்டு வருவேன் என்ற உறுதியளிக்கிறேன். அதில் ஒன்று இன்று உங்கள் கையில் தவழ்கிறது. நீண்ட நாட்களாக காத்திருக்கும் இன்னும் சில தலைப்புகளை முடித்து விட்டு ஐந்தாம் பாகத்தை எழுதி வெளியிடலாமென திட்டமிட்டுள்ளேன். நவம்பர் 2019ல் ஐந்தாம் பாகத்தை எதிர் நோக்கி காத்திருங்கள், அதுவரை நான்கு பாகங்களையும் இரசித்திருங்கள்.

இதுவரை இபுத்தகங்களாக வெளியிடப்பட்ட நாலு சொல்லில் முதல் மற்றும் இரண்டாம் பாகம், நிலவும் நீயும் நானும் - மூன்று பாகங்கள், கண்களை மூடிப்பார், அவளோடு ஒரு பயணம் என்ற ஏழு கவிதை தொகுப்புகளுக்கும், உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட என் மரணம், தீட்டு, குற்றால வலி(ழி) மற்றும் மக்களாட்சியில் என் கடைசிப் பயணம் என்ற குறுங்கதைகளுக்கும் பேராதரவு தந்த அனைத்து நல்லுள்ளங்களும் என் மனமார்ந்த நன்றிகளும் வணக்கங்களும்.

பெற்றெடுத்த நாள் முதல் இன்று வரை என் வாழ்வில் பல்வேறு விசயங்களுக்கான நல்விதைகளை சொற்களாலும் செயல்களாலும் விதைத்து கொண்டே இருக்கும் **என் தாய் திருமதி.சரோஜா அவர்களுக்கும், தந்தை திரு.ராசையா** அவர்களுக்கும் எனது சிரம் தாழ்ந்த வணக்கங்கள் எப்போதும் உரித்தாகுக. எனக்காக, என்னை என்னிடம் முழுவதும் தந்து விட்டு பயணிக்கும் என் சகோதரிகளுக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

அன்புடன் |கருவெளி ராச.மகேந்திரன் | ஆசிரியர்

எச்சரிக்கை

நிலவு
நிலவாய் இருக்கட்டும்
நீங்கள்
நீயாகவோ.. நானாகவோ
மட்டும் இருங்கள்..
இனி வரும் ஒவ்வொரு கவிதையிலும்!!

நீங்கள் இப்புத்தகம் முழுவதும் மட்டுமின்றி இனி வரவிருக்கும் "நிலவும் நீயும் நானும்" தொகுப்புகள் முழுவதும் நிலவாக இருக்க ஒவ்வொரு முறையும் தூண்டப்படுவீர்கள். ஆனால் இடைவிடாது நீங்கள், நீயாகவோ, நானாகவோ இருக்க மட்டுமே முயற்சி செய்யுங்கள். இந்த எச்சரிக்கைக்கான அர்த்தம் உங்களுக்கு ஒரு நாள் விளங்கிவிடும். அந்த விளக்கம் தன்னைத் தானே விளக்கத் துவங்கும் களத்திற்குள் களமாட தயாராகுங்கள் !

நிலாவோடு கூட்டாஞ்சோறு

அவசரத்தை அப்படியே
சொல்கிறது..
தட்டப்பட்ட கதவு..

எனக்கு முன்னே
ஓடோடித் திறக்கிறாள்..
என் அன்னை!

திறந்த கதவில்..
ஒளிவீசி நிற்கிறாள்
நிலா..

இரண்டு பௌர்ணமி கடந்து..
இன்று தான் திரும்பி இருக்கிறேன்..
கல்லூரியிலிருந்து..

அதிசயம் தான்..
இரவு வரை அவளுக்கு தெரியாமல்
இரகசியம் காத்தது!

வா! நிலா..
இன்னைக்குத்தே வழி தெரிஞ்சதா?
சத்தமாய் கேட்டு..
அவள் வருகையை..
எனக்கும் சொல்லி வைத்தார்..

என் தாயல்லவா?

கருவெளி ராச.மகேந்திரன்

கட்டாயம்..
அவள் வசை மொழிகள்..
கேட்க வேண்டும்..
தயார்படுத்திக் கொண்டேன்
என்னை நானே!

காரணம் இருக்கு!

என் வருகையை..
எப்படியோ மோப்பம் பிடித்து..
நேற்று இரவு அழைத்திருந்தாள்!
இல்லை என்று..
நானும் மறுத்திருந்தேன்!
இருந்தும் வந்து விட்டாள்!

இரண்டு பௌர்ணமி..
இடைவெளிகள்..
இதுவரை நிகழ்ந்ததே இல்லை!
எங்கள் வாழ்நாளில்!
இதுவே முதல் முறை!

வளர வளர..
விலகிவிடுவாள்..
நான் நம்பியிருந்தது அப்படித்தான்!

அவளோ விலக விடாமல்..
நெருங்குகிறாள்!
நினைப்பதெல்லாம்
நடப்பதும் இல்லை!
நினைப்பதே நடப்பதும் இல்லை!

உங்களுக்கு மட்டுந்தா தெரியுமா?
நாங்களு வருவோம்ல..
இரகசியமா!

குரல் கொடுத்தபடியே..
திரும்பும் முன்னே..
அறைக்குள்ளே வந்து விட்டாள்!
என் முன்னே!

எழுதிய வார்த்தைகளை
பாதியில் நிறுத்தி விட்டு எழுந்தேன்!
அவள் பேசக் கேட்பது
அவளிடம் பேசியவர் யாவருக்கும் பிடிக்கும்!
புத்தகம் எழுதுறதா..
உங்கம்மா.. பெருமையா பேசுது!
எங்கிட்ட ஒரு வார்த்த கூட..

பேசிக்கொண்டே
பறித்து விட்டாள்..
என் கையிலிருந்த கையேட்டை..
மௌனமாகிறாள்!
முதல் பக்கம் பார்த்ததும்..

பக்கங்கள் செல்லச் செல்ல..
வார்த்தைக்கு வார்த்தை..
அவள் முகம் வாய் திறக்காமல்..
முதல் முதலாய் பேசிக்கொண்டிருக்கிறது!
அவள் முகபாவனைகள் பார்த்தே
வாழ்ந்து முடித்து விடலாம்!

பேரமைதியால்..
என் தாயும் தந்தையும்
என் அறைக்கு வந்து விட்டார்கள்!
அவள் மௌனம் அபூர்வம்..
அவள் பேச்சும் தான்!
அவள் அவளாக இருக்கட்டும் என்று
அவர்களையும் அமைதியாக்கி..
நானும் அமைதியானேன்!

அவளை..
நான் கண்ட அவளை..
நீயாகவும்..
அவள் காண விரும்பும்
என்னை..
நானாகவும்..
எங்களை இணைக்கும்
நிலவை நிலவாகவும்..
வார்த்தைகளில் கோர்த்திருந்தேன்..
"நிலவும் நீயும் நானும்" என்ற தலைப்பில்!

அவளுக்குச் சொந்தமானவை தான்
அத்தனை நொடிகளும்..
ஆனாலும் உறைந்து போய் நிற்கிறாள்!
அவள் வாழ்வை மறுபடியும்
வாழ்ந்து வாழ்ந்து பார்க்கிறாள்
வார்த்தைகளில்!

வெளியீட்டு விழாவிற்கென வைத்திருந்த
இரகசிய முடிச்சுகளை
அவளே அவசரமாய் அவிழ்த்து விட்டாள்!
அவள் வாசித்து முடிக்கையில்..
நானோ..
என் பெற்றோரோ..
அங்கிருப்பது.. அத்தனை.. சரியாய்
எனக்குள் தோன்றவில்லை!

மாடிக்கு செல்வதாய் புறப்பட்டேன்!
அவள் அங்கு தான் இருக்கிறாள்!
அவள்.. அவள் மட்டும் தான் இருக்கிறாள்!

இரண்டு பௌர்ணமி
இடைவெளிகள் அவளுக்கு
இனி நினைவில் இருக்காது!
இன்னும் கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்!
நான் இன்னும் கொஞ்சம்
காலம் தாமதித்து எழுதியிருக்க வேண்டும்!

என் கணிப்பு தவறானால்..
இன்னும் சில நொடிகளில்..
அவள் என்னருகில் இருப்பாள்..
நினைத்து முடிக்கையில்..
அவள் வீட்டில் அவள் குரல்..

பெருங்குரலெடுத்து..
தன் பெருங்குரலெடுத்து
தன் குடும்பத்திற்குப் பாடுகிறாள்!
அவள் உள்ளம் சொல்லும்
அந்த கவிதை வரிகளை..

வார்த்தைக் கோர்வைகள்..
கோர்த்தது நான் தான்!
உடனே மெட்டுகள் கோர்த்ததோ
அவள் தான்!

நிலவைப் பார்த்து..
சிரிக்கிறேன்!
நிலவும்.. நிலவில் நிலாவும்
சிரிக்கிறார்கள்!

கீழே வருகிறேன்!
அடப்பாவி..
அவ மட்டும் போவானு பார்த்தா..
குடும்பத்தையே..
காலி பண்ணிட்டு போயிருக்கா..

கையேட்டைத் திறக்கிறேன்..
அவள் கண்ணீராலும்..
அவள் புன்னகையாலும்..
கொஞ்சம் கனத்து போயிருந்த
கையேட்டைத் திறக்கிறேன்..
கோர்த்திருந்த வார்த்தைக் கோர்வைகள்..
உயிர் பெற்று குதூகலமடைகின்றன!

இன்று இரவு..
இந்த பௌர்ணமி..
இருவரும்..
இருவரின் குடும்பமும் கொண்டாட..
தயாராகிக் கொண்டிருக்குது!

இத்தனை தாமதத்திற்குப் பின்
இன்று தான்..
நான் சொல்லவிருக்கும் சம்மதத்தை
அவள் மூலமாய்..
அனைவரும் அறிகிறார்கள்!

அவள் அழைப்பு வருது..
நிலவு.. நிலவாக இருக்கட்டும்..
நீங்க “நானா” இருங்க..
நிலா, “நான்” நீயமாக இருக்கேன்!

புத்தகத்தின் முகப்பு வரிகளைச் சொல்லி
ஆரம்பிக்கிறாள்!
பதில் சொல்ல வாய்ப்பு கொடுக்காமல்..
இன்னும் ஒரு மணி நேரத்தில..
எல்லா தயாராகிடும்..
கூட்டாஞ்சோறுக்கு..
மொட்டை மாடிய தயார்படுத்துங்க..
மாமா..

அந்த ஒற்றை வார்த்தைக்குள்..
அவள் வாழ்க்கை சுழன்று சுழன்று வருது!
அவள் சிறகுகள் அதையே வானமாய்
நம்பித் திரிகின்றன!

அப்படியே ஆகட்டும்..
உத்தரவு நிலா..
அப்படியே.. அம்மா அப்பாவ
அனுப்பி வை..
வீட்டுல யாருமில்ல..

மொத்தமா வாறோம்.. என்கிறாள்
மொத்தமா? வாங்க.. வாங்க.. என்றபடி..
நிலவோடு நானும்
கூட்டாந்சோறுக்கு காத்திருக்கிறேன்!

ஒன்றாய் வாய்த்தால்

வாழ்க்கை இருண்டு தான்
போகிறது!
முழுவதுமாய் இருண்டு தான்
போகிறது!
அவள் இல்லா இரவும்
நிலவில்லா இரவும்
ஒன்றாய் வாய்த்தால்..

சொல்லி விட்டு

சொல்லாமல் துடித்திருந்தவள்
சொல்லி விட்டுத் துடித்திருக்கிறாள்!
முகமும் தெரியா - ஒரு
அமாவாசை இரவில்!
உள்ளத்துத் தைரியத்தை திரட்டி
தன் உள்ளக்கிடக்கையை சொல்லி!
சொல்லாமல் துடித்திருந்தவள்
சொல்லி விட்டுத் துடித்திருக்கிறாள்!

நிலவும் நிலாவும் சாந்தினியும்

குளிரூட்டப்பட்ட இரயில் பெட்டி
அவளுக்குப் புதிது!
அவனுக்கு புதிதல்ல..
அவனுக்குத்தான் என்று
அவள் வளர்த்தெடுக்கப்பட்டாள்!

மண்ணாளும் அந்த தேசத்தில்
அவள் சொந்தங்களை விட்டு
குதூகலமாய் புறப்பட்டாள்
அவனோடு!

குழந்தைக்கு என்ன தெரியும்?
வழியனுப்பியவர்களுக்கும் தெரியாது!

அவளை அறிந்திருந்த
பூமியின் ஒற்றைச் சொந்தம்
வானத்தில் தவித்திருந்தது
தனித்திருந்தது!

பல நாட்களாய் அவள் சொன்ன
கதைகளையெல்லாம் நினைத்து
துடித்திருந்தது!

அவள் தோழிகளுக்கெல்லாம்
கதை கதையாகச் சொல்லி விட்டாள்!
அவன் சொல்லிய கதைகளைத்தான்!

அவள் மண்ணை விட்டு
இரயில் பெட்டிகள் புறப்பட்டன!
பூட்டப்பட்டிருந்த பெட்டிக்குள்
அவள் வானத்தை பார்க்க முயன்று
தோற்று துவண்டு விட்டாள்!

அவளுக்கு வகை வகையாய்
உணவுகள் வந்து சேர்ந்தன!
ஆசை ஆசையாய்
அத்தனையும் உண்டு விட்டு
அவன் மடியில் சாய்ந்தாள்!

பெரும் நகரங்கள்..
புதிய இடங்கள்
புதிய மக்கள்
புதிய மொழி என
அவன் சொன்ன அத்தனையும்
அந்த இரயில் பெட்டியின்
வெளியே கடந்து போனது!
அவள் தான் காணவே இல்லை!

கண்களை விழிக்கிறாள்..
நிலா என்று கதறியபடி..
மருத்துவச்சி வெளியே ஓடுகிறாள்!
இவள் கண்விழிக்க காத்திருந்த
கண்ணுறங்கா நிலா..
உள்ளே வருகிறாள்!

மண்ணாளும் பூமி விட்டு
புறப்பட்ட குழந்தை..
புதிய முகங்களை
புதிய இடத்தை பார்க்கிறது!
அக்கதைகள் சொன்ன
அவனைத் தேடுகிறது!

எழ முயற்சித்து முடியாமல்
படுக்கையிலே வீழ்கிறது!
சாந்தினிக்கு நடந்தது
அவளுக்குத் தெரியாது!
வேறு யாருக்கும் தெரியாது!

கருவெளி ராச.மகேந்திரன்

அவள் புறப்பட்டு
அன்றோடு ஆறு வாரங்கள்
முடிந்து போயிருந்தது!

"நிலா" அவளை
நெல்லூர் இரயில் நிலையத்தில்
கழிவுகள் கொட்டுமிடத்தில்
மீட்டெடுத்திருந்தாள்!
அவள் புறப்பட்ட
மூன்றாம் நாளில்..

தகவல் சொன்ன எண்..
அதன் பின்னே
உபயோகத்தில் இல்லை!
அந்த எண்..
நெல்லூர் இரயில் நிலையத்தை
தாண்டவும் இல்லை!

குழந்தை சாந்தினி..
மூன்று தினங்களாய்
முப்பதுக்கும் மேற்பட்ட
முறை வல்லுறவுக்கு
பயன்படுத்தப்பட்டுள்ளாள்!
அமைதியாயிருக்க..
போதை கொடுக்கப்பட்டுள்ளது!

ஏதுமறியாதவளாய்..
புலம்பத் துவங்குகிறாள்!
சாந்தினி..
அப்பெயர் நிலவுக்குத் தெரியும்..
மண்ணாளும் பூமியிலிருக்கும்
அவள் உறவுகளுக்குத் தெரியும்!
இப்போது அவளுக்குத் தெரியாது!

அவள் புலம்பல்கள்..
வலியால் கதறல்கள் ஆகுது!

நிலாவின் வார்த்தைகள்
ஆறுதல் ஆகாமல் தோற்குது!
அவள் புலம்பல்களில்
அவன் பெயர் வருது!

நிலா..
அப்பெயரை நெல்லூர்
இரயில் நிலையம் அனுப்புகிறாள்!
அதே பெயரில்..
அறுபது பயணிகள் பட்டியல்
அவளை வந்து சேருது!

அனைத்து எண்களுக்கும்
அழைக்கிறாள்!
ஒரு எண் மட்டும்
எல்லைக்குள் இல்லை!
மூன்று தினங்களும்
அதுவே நிலை!
மற்றவர்களின் விசாரணை
தொடர்ந்திட..

அழைப்பு வந்த எண்
அதை எடுத்துப் பார்க்கிறாள்!
அதே எண்!

அத்தனை தகவலும்..
அவளை வந்து சேருது!
ஒரு பெருமூச்சை விட்டு..
தன் உயிர் மூச்சை
மறுபடியும் தேக்கி!

அழைக்கிறாள் நிலா..
அவளை மும்பை
குப்பைத் தொட்டியில் மீட்டெடுத்த
தன் வழிகாட்டிக்கு!

சாந்தினியின்
பெயரும் கிடைக்குது..
உறவுகளும் கிடைக்குது..
உடலிழந்து..
உருப்பிழந்து
உணர்வுகளிழந்து..
உறவுகளோடு புறப்படுகிறாள்..
குழந்தை சாந்தினி..

நினைவும் வராததால்
நிசமும் அறியாததால்
சாந்தினிகளை மீட்டெடுத்தும்
வாழ்வித்தும்..
உறவுகளோடு வழியனுப்பியும்
வாழ்வை நகர்த்துகிறாள்..
மும்பையில் மீட்டெடுக்கப்பட்டு
சாந்தினி என பெயர் சூட்டப்பட்டு..
தமிழ் பேசியதால் நிலா ஆன நிலா!

இருக்குதடி!

நிலவு வந்து..
நீ கண்ணயரும் வேளையிலே..
நிலவுக் கவிதைகள் இருக்குதடி!

கதிரவன் வந்து
நீ கண் திறக்கும் வேளையிலே
எழுச்சிக் கவிதைகள் இருக்குதடி!

நான் இன்றிப் போனாலும்
எப்போதும் உன்னோடு வர
என் வார்த்தைக் கோர்வைகள் இருக்குதடி!

சுமை தாங்கி நான்

நிலவைப் போல்..
அவனும் தூரம் போகிறான்!

யாருமில்லா நானோ..
நிலவின் நிழலை வரைந்தும்
அவனின் நினைவை சுமந்தும்
நாட்களை நகர்த்துகிறேன்!

என் இதழ்களில்

ஆயிரமாயிரம் நிலவுகள்
அவன் வரைகிறான்
அவன் தூரிகைகளால்..

அவனிடம் கேட்டும்..
அவன் வரைந்ததில்லை..
அவன் இதழ்களால்..
என் இதழ்களில் ஓர் நிலவு!

கருவெளி ராச.மகேந்திரன்

நிலவும் அவனும் கண்ணம்மாவும்

மாதங்கள் பலவிட்டு
மறுபடியும் அழைத்திட..
மனம் திறந்து பேசிட..
மாலை வரை காத்திருக்கிறேன்!

கதிரவன் கடமை மாற்றி
சந்திரன் வந்து சேர
பொறுமையாய் காத்திருக்கிறேன்!

பல மாத காத்திருப்பினும்..
காலையிலிருந்து கடினமாய்
நானும் காத்திருக்கிறேன்!

நிலவின் துணை கொண்டு
உன் பிரிவினை
உனைப் பிரிந்த நாழிகைகளை
நான் கடத்தி விட்டேன்!
ஒரு துணையும் இல்லாமல்
நீ எப்படி கடத்தினாயோ?
ஒவ்வொரு நாழிகையையும்!

நானொரு பேதை..
நீ அறிமுகம் செய்த நிலா
எனக்கு துணையாகையில்..
உனக்கு துணையாகாமல் போகுமோ?

பௌர்ணமி நிலா..
வானம் வந்து விட்டது!
கண்களைப் பறிக்க..
ஒளி வீச துவங்கி விட்டது..

மனதில் படபடப்பு..
தானே வந்து விட்டது!
முதல் சந்திப்பென
இதயம் துடிக்க துவங்கிவிட்டது!

அவனை அங்கமாய் பெறுவது
கடினமே இல்லை..
அவனை அப்படியே இழப்பதே
கடினமாய் எனக்கு!
ஆனாலும் இழந்திருந்தேன்..
அதுவும் அவனுக்காக!
அவனிடம் சொன்னதில்லை
எதுவும் இதுவரையில்!
அவன் அறிவான் என்பதில்
எனக்கு ஐயமில்லை!
இருந்தும் பிரிந்திருந்தேன்
இதுவரை நான்!

இழக்க ஏதுமில்லை..
இக்கணம் என்னிடத்தில்
இருப்பதாய் நான் நினைப்பது
அவன் மட்டுமே!
அவனும் அப்படி நம்பினால்
என் வாழ்வு தொடரும்..
இல்லையேல் இடையிலே
காலத்திடம் இடரும்!

கைபேசியே பார்த்தபடியே
காத்திருக்கிறேன்..
அழைக்க வேண்டிய நான்
அவனை அழைக்காமல்!
அவன் அழைப்பு வருமென்று!!

நான் நினைத்ததும்..
எனக்குத் தேவை என்றதும்..
அழைக்கும் அவனுக்காக
அவன் அழைப்புக்காக
காத்திருக்கிறேன்!

என்னைக் கேட்காமல்
காலம் கை நழுவிக் கொண்டே
என்னை வதைத்திட..
இதயம் இடறி இடறி துடித்திட!
நானே அழைப்பதாய்
முடிவெடுத்து அழைக்கிறேன்!

எதிர்முனையில்..
என் தாயின் குரல்..
நல்ல வேளை..
அவன் பேர் சொல்லி
கேள்விகள் ஏதும் கேட்கவில்லை..

இது எப்படி நிகழ்ந்தது?

தாயின் கேள்விகளுக்கு
ஆ கொட்டி..
உ கொட்டி..
மௌனங்களால் நிரப்பி..
அழைப்பை முடிக்கிறேன்!

அவளுக்குத் தெரியும்
அவள் மகள் மனம்!
ஆனாலும் காத்திருக்கிறாள்
என் வாய் வார்த்தைகளுக்காக!

கைபேசியில் ஏதும் கோளாறோ?
மீண்டும் தேடுகிறேன்!
அவனுக்கு அழைக்கையிலே..
அம்மாவின் அழைப்பை ஏற்றிருக்கிறேன்!

தாமதிக்காமல் மறுபடியும்
அழைக்கிறேன் அவனுக்கு!
அழைப்பை ஏற்பானா?

நிச்சயம் ஏற்கமாட்டான்..
உள்ளுக்குள் ஓர் மனம்..
உரக்கச் சொல்லுது! - அதன்
ஓலக்குரல் முடியுமுன்னே
அழைப்பு ஏற்கப்படுது!

வார்த்தைகள் வரவில்லை..
மௌனம் முடிக்க முயல்கிறேன்..
முடியாமல் தோற்கிறேன்!

“அப்பா..”
யாரோ? பேசமாட்றாங்க..
“யாருனு கேளு.. கண்ணம்மா..”
ஆம், அது அவன் குரல்!

“அப்பா! கண்ணம்மா!!”

அவனின் கண்ணம்மா..
கைபேசியுடன் காத்திருக்க..
அவன் அப்பாவாகிவிட்டான்..
அவனை அழைத்துப் பேச
அவனுக்கென கண்ணம்மாவும்
வந்து விட்டாள்!

கருவெளி ராச.மகேந்திரன்

முழு நிலவில்..
அவன் புன்னகை..
மறுபடியும் பார்த்தேன்!
இனி பேச ஏதுமின்றி..
அழைப்பை துண்டித்தேன்!

காத்திருப்புகள்.. முடிந்தது
அவனுக்கான காத்திருப்புகள்
அக்கணமே முடிந்தது!

மீண்டும் அழைப்பு வந்தது
அவன் எண்ணிலிருந்து!

வணக்கம்..
நான் கண்ணம்மா பேசுறே..
நீங்க யாரு பேசுறது?
நீங்க பேசுறது கேட்கல..
சத்தமா பேசுங்க..
சாப்பிட்டீங்களா?
அப்பாட்ட பேசணுமா?
அம்மாட்ட பேசணுமா?
அப்பப்பாட்ட பேசணுமா?

குட்டிக் கண்ணம்மா..
நா கண்ணம்மா பேசுறே..
தப்பான எண்ணுக்கு கூப்பிட்டுட்டே..
மன்னிச்சிடுங்க..
ஓ! அப்படியா?
நிலா மேல சத்தியமா?

"நான் அவனிடம் வாங்கிய சத்தியம்"
இந்தக் கண்ணம்மாவிற்கு யார் சொன்னது?
நினைத்திருக்கையில்..

மறக்காம வீட்டுக்கு வாங்க..
அப்பப்பாவ வந்து
கூட்டி வரச் சொல்றே!
அப்பப்பாதா என்னைய கூட்டி வந்தாரு!
வீட்டுக்கு வழி சொல்றே
எழுதிக்கோங்க..

அவன் சொல்லச் சொல்லானா?
அவளாக சொல்கிறாளா?
ஏதும் விளங்காமல்..
அவள் சொல்லச் சொல்ல..
அப்படியே குறித்துக் கொண்டேன்!

அடுத்த கணம்..
அவன் குரல்..
மன்னிக்கவும்.. அவ தெரியாம..
இந்த எண்ணுக்கு கூப்பிட்டுட்டா!
என் பதிலுக்கும் காத்திராமல்..
கைபேசியே வைத்து விட்டான்!
அவன் இணைப்பை துண்டிக்கவில்லை!

கண்ணம்மா..
அப்பப்பா கைபேசியை எடுக்க கூடாது..
தெரியாதவங்களுக்கு பேசக் கூடாது..
எத்தனை தடவை சொல்றது உனக்கு!

இன்னொரு தடவ..
இப்படி செஞ்ச..
அப்பாட்ட சொல்லிடுவேன்..

வேணாம்.. அப்பப்பா..
கண்ணம்மா.. இனி அப்பப்பா
சொல்லு கேட்பா..
சரி கண்ணம்மாவிற்கு..
ஒரு பாட்டு பாடுங்க..
பாப்பா தூங்கணும்..

அவன் தன் குரலில்
பாடுகிறான்..
அவன் மடியில் நான் தூங்க
அவன் எனக்கென பாடிய..
முதல் பாடலை!

பல மைல்கள் தாண்டித் தான்
இருக்கு அந்த முகவரி..
ஆனாலும் போகத்தான் வேண்டும்!
அவனிருக்கும் இடமே
நானிருக்க வேண்டிய இடம்!

குட்டிக் கண்ணமாவிற்கும்..
அவன் நெஞ்சம் நீங்கா
நிலவுக் கவிதைகளுக்கும்
நன்றி சொன்னபடி!
குட்டிக் கண்ணம்மா சொன்ன
முகவரியைத் தேடினேன்!
அனைத்து தகவலும்..
நொடியில் கிட்ட..
என் தாய்க்கு அழைத்தேன்!

அவன் கிடைத்து விட்ட
செய்தியை சொன்னேன்!
நான் திரும்பி வரும்
செய்தியை சொன்னேன்!
அத்தனையும் ஒதுக்கி..
அவன் இடம் நோக்கிப் பறந்தேன்!

அவன் வீட்டு வாசலில்
காத்திருக்கிறேன்!
வாசலொலி எழுப்பி!!

கதவுகள் மெல்லத் திறக்குது..
கீழே நின்று..
என்னை வரவேற்கிறாள்..
குட்டிக் கண்ணம்மா..

மீண்டும் கேள்விகளால்
துளைக்கிறாள்!
கண்ணுக்கெட்டும் தூரத்தில்
அவனைத் தேடுகிறேன்!

கண்ணம்மா என்றபடி..
அவள் தாய் வருகிறாள்!
மூவரும் உள்ளே செல்கிறோம்..

அவள் கேட்பதற்கு முன்னே..
அவனைப் பற்றி
நானே கேட்கிறேன்!

அவனைப் பற்றி
அவள் சொன்னது..
அவன் என் கை நழுவிப் போனதை..
அக்கணமே உறுதி செய்தது!

முயற்சிகள் ஏதுமின்றி
சத்தங்கள் ஏதுமின்றி
என் கன்னத்துக் குழிகளை
நிறைத்தபடி என் அங்கம் நனைக்க
வழிந்தோடியது கண்ணீர்!

பாவம் அவளுக்குப் புரியவில்லை..
எனக்குப் புரிய வைக்கவும் தெரியவில்லை!

குட்டிக் கண்ணம்மா
என்னோடு அழுதபடி சொன்னாள்..
அழாதீங்க..
சிரிச்சுகிட்டே இருந்தாத்தா..
அப்பப்பா மறுபடியும்
நம்ம வீட்டிற்கு வருவார்!
நிறுத்த முயற்சித்தும் நிற்கவில்லை
கண்ணீரும்.. இதயத்துடிப்பும்!

கைபேசி எடுத்து..
அவன் எண்ணைத் தேடி
அழைக்கிறேன்!
குட்டிக் கண்ணம்மா..
ஓடிப் போகிறாள்..
அப்பப்பா..
நா சிரிச்சிட்டு இருக்கேன்.. வாங்க!

அம்மம்மா நீங்க சொல்லுங்க..
அப்பப்பாவ வர சொல்லுங்க..
என்னை நோக்கி வருகிறாள்
குட்டி கண்ணம்மா!
அக்கைபேசியில் என் எண்!

அவன் வாழ்வு இக்கணமே
முடிந்து போகட்டும்..
என் வாழ்வும் தான்..
அவனுக்கான என் சாபங்கள்
பலிக்காமல் போகட்டும்!
எனக்கான என் வேண்டுதல்
இக்கணமே நிறைவேறட்டும்!

குட்டிக் கண்ணம்மாவை தேற்றிட..
அவளைத் தூக்கி கொண்டு..
தேய்ந்திருக்கும் நிலவைக் காட்டுகிறேன்!
ஒற்றையாய் வானில் தனித்திருக்கும்
தேய்ந்த நிலவைக் காட்டுகிறேன்!

அம்மம்மா.. பாப்பா தூங்கணும்
பாட்டு பாடுங்க..
அவன் மடியில் நான் தூங்க
அவன் எனக்காக
முதன் முதலில் பாடிய பாடலை
அவனில்லா இந்நொடியில்
இவளுக்காக பாடுகிறேன்!
எனக்காகவும் தான்!

வருமோ?

தேய்ந்தாலும் - பின்
வளர்ந்து வரும்..
நிலவென..
நித்தம் நம் உறவு
வளர்ந்து வருமோ?
முழு நிலவாய்!

நீயின்றி.. நிலவின்றி..

நீ இல்லா நிமிடங்களை
நிலவுடன் கழித்திருப்பேன்!
உன் பிரிவைச் சொல்லி!

நீ இருக்கும் நிமிடங்களில்
நிலவுடன் களித்திருப்பேன்
நம் உறவைச் சொல்லி!

நிலவில்லா நிமிடங்களில்..
நீயில்லா நிமிடங்களில்..
வாழ்ந்தும் வாழாதிருப்பேன்!

கருவெளி ராச.மகேந்திரன்

நீங்கா நிலவும் நிலாவும்

சொல்லாத வார்த்தைகளை
சொல்லி விட்டு..
மௌனத்தில் காத்திருக்கிறாய்!

கேட்காத வார்த்தைகளை
கேட்டு விட்டு..
மௌனங்கள் கலைத்து..
எப்போதும் போல்..
உனக்குப் பிடித்த
நிலவுக் கவிதைகள்..
நான் பாடி நிற்கிறேன்!

நீண்ட இடைவெளி விட்டு..
மூன்றாம் பிறை பருவங்கள்
அதைச் கழித்து..
விழி அம்பு எய்கிறாய்!
நெஞ்சோடு அதைத் தாங்கி..
அடுத்த நிலவுக் கவி தொடர்கிறேன்!

முதல் முதலாய்..
எனைத் தடுத்து..
நிலவுக் கவிதை நீ சொல்கிறாய்!
நிலா உன் உள்ளத்தைச் சொல்கிறாய்!

நிலவில்லா..
அமாவாசைக் கவியோடு
நான் பிரிய முயல்கிறேன்!

பிரியமானவள் தான்..
பிரியம் தந்தது என் தவறு தான்!
அந்நொடி வரை அறிந்தும் தொடர்ந்தது
என் தவறு தான்!

உன் வழி வேறென்றும்..
என் வழி வேறென்றும்
எச்சரிக்கை செய்தும்..
எதுவும் பயனில்லை.. என்றறிந்தும்..
இன்று வரை தொடர்ந்தது
என் தவறு தான்!

என் கை பற்றியிருந்த..
அவள் பிஞ்சுக் கரங்களை விலக்கி
நானும் விலகுகிறேன்!

விளங்காதவள் போல்..
விண்ணைப் பார்த்து நிற்கிறாள்!
விளங்கும் நாள் வருகையில்..
அவள் பற்றிக் கொள்ள
என் கரங்களும் இருக்காது!

விண்ணைப் பார்த்து
நகைத்து விட்டு..
நிலவுக்கும் நிலாவுக்குமான..
கவி பாடியபடி நான் போகிறேன்!

நிலவும் நிலாவும்
என்னை நீங்காமல்
உடன் தொடர்ந்திட..

அவள் நிலாக்கள்!

அத்தனை அழகு வட்டமாய்
இருக்காது..
அனுதினமும் அவள் வரைந்து
அனுப்பும் நிலா!
ஆனாலும் அவள் கரங்கள்
பெற்றுச் செல்லும்
என் கரங்களின் வெப்பத்தை!

இன்றும் அனுப்புகிறாள்..
அழகழகாய்.. வட்டம் வட்டமாய்..
வான் நிலவும் வந்து பார்க்க..
வண்ணங்கள் தீட்டி
நிலவினை!
பாவம் அவள் கரங்கள் பெற்றுச் செல்ல
என் கரங்களின் வெப்பமும்..
என் கரங்களும் இங்கில்லை!

என் கல்லறையெங்கும்
அவள் நிலாக்கள் சிதறிக்கிடக்கின்றன!

நிலாத் துளிகள்

விடிந்ததும்..
மறைந்ததாய்
நாம் நம்பும் நிலவும்..
நம்மைத் தான் உலா வருகிறது!
நமக்காகவே!

நாம்
கண்டு கொள்ளாமல் விட்டாலும்..
பகலிலும்
நம்மையே வட்டமிடுதடி வானத்து நிலா!

நிலவு நிலவாயிருக்கட்டும்

மகிழ்ச்சியால்..
பௌர்ணமியாகி இருந்தது..
அவள் முகம்!

எதிர்பார்த்திருந்த..
சம்மதம் கிடைத்தது
அவள் கேட்டதும்!

மகிழ்ச்சியை பகிர
ஓடோடி வருகிறாள்..
அவன் இல்லம் நோக்கி!

துவண்டு கிடக்குது
அவன் இல்லம்!
அதிர்ந்து நிற்கிறாள்!

அவன் கடிதம்..
அவள் கை சேர்கிறது!
அவன் வெளியேறிய
செய்தியை சொல்லியபடி!

நிலவு நிலவாயிருக்கட்டும்..
நிலா நீ நீயாயிரு..
நான் நானாயிருக்கிறேன்!

அரை நிமிடங்களில்..
அந்த பௌர்ணமி நிலா
அமாவாசையாகித் திரும்புது!
அவள் இல்லம்!

எது நிகழ்ந்தாலும்..
தேற்ற இருக்கும் அவன்..
தோற்று ஓடினானா?
அவள் உள்ளம்..
ஏற்க மறுத்து நடக்குது..
அவள் இல்லம்!

என்னாச்சு?
"அவள் பெற்றோர்கள்.."

கடிதத்தை கொடுத்து விட்டு..
தன் அறைக்கதவை..
சாத்துகிறாள்.. நிலா!

தாக்குதல்களுக்கு
கதவு தாங்காது..
உடைகிறது!

உள்ளம் உடைந்தவளாய்..
சன்னல் வழியே..
நிலவை பார்த்தபடி நிற்கிறாள்!

கட்டிக் கொண்டு அழுகிறாள்
தாய்!
ஆவேசமாய் கத்துகிறார்
தந்தை!
அம்மாவிற்கு சுருதி சேர்க்கிறாள்
தங்கை!

நிலவு நிலவாயிருக்கட்டும்..
நிலா நிலாவாயிரு..
நான் நானாயிருக்கிறேன்!

அந்தச் சொற்கள்
அவள் மூளையின் மூலைகளை
ஆக்கரமிப்பு செய்து விட்டது!

அத்தனை கேள்விகளுக்கும்..
அவளிடம் இருக்கும் பதில்..
அவைகளே!

அவள் பதில் தேடும்
அந்தக் கேள்விகளே
அனைவருக்கும் பதில்களாய்!

அறையை விட்டு..
அவள் வெளியேறி..
அவன் வீடு புறப்படுகிறாள்!
அவளை தடுப்பதற்கு ஆளில்லை!

அவன் நின்ற இடத்தில்..
அந்த மொட்டை மாடியில் நின்று
ஓங்கி குரலில் பாடுகிறாள்..
அவன் பாடிய நிலவுக் கவிதைகளை!

அந்த மீன்கள் விட்டுக் கொடுத்தால்..
மூன்று நாட்களில் அவன் முழு உடல்
மிதந்து மேலே வரலாம் - அந்த
நம்பிக்கையில்.. உண்மை அறிந்த
அந்த வானத்து நிலவு
அவளோடு காத்திருக்கு!

அந்தக் கிணற்றுக்குள் விழுந்து
அவனைத் தேடியபடி
அவளுக்காக தன் பணியை
செய்ய முடியாமல்..
மேலே மிதந்தபடி காத்திருக்கு..
அவனுக்காக..
பூமி தாண்டிய ஒற்றை உறவான
பௌர்ணமி நிலவு!

வேறென்ன வேண்டும் எனக்கு?

வெளியே வந்து பார்..
இரட்டை நிலவை..
அழைத்துச் சொல்கிறாள்!

மேகங்களில் சிக்கி..
நிலா வேசம் போட்டிருக்கும்
காலைக் கதிரவனைக் கண்டதும்!

இரவெல்லாம்..
நிலவுக் கவிதைகள் சொல்லி..
விடியற்காலையில் தூங்கச் சென்ற எனக்கு
வானத்தில் இரட்டை நிலவு தான்!

நிலா.. ஒரு அதிசயம் என்றால்..
அவள் அறிமுகம் செய்த
நிலவு ஒரு அதிசயம் என்றால்..
அவள் நித்தம் நித்தம்
அறிமுகம் செய்யும் அத்தனை நிலவும்
அதிசயங்களிலும் அதிசயம்!

தினமும் நிலவுக் கவி பாட..
வேறென்ன வேண்டும் எனக்கு?

எங்கும் நிறைந்திருக்கிறார்கள்

பள்ளி சென்று திரும்பிய
முதல் நாளில்..
நிலாப் பாட்டுப் பாடுகிறாள்
நிலா..
பாடப்புத்தகத்தில் இல்லா..
நிலாப் பாட்டுப் பாடுகிறாள்
நிலா..

பள்ளியிலும் நிலவில் மயங்கிய
நிலவின் காதலியோ..
நிலவின் காதலனோ..
நிலவின் நட்போ..
இருக்கும் செய்தி சொல்லி..

கருவெளி ராச.மகேந்திரன்

குட்டி நிலா!

முழு நிலா பார்க்க..
மூவரும் காத்திருக்கோம்..
நிலாவும் குட்டி நிலாவும் நானும்!

பூமி தாண்டிய எங்கள் முதல் உறவை
குட்டி நிலாவுக்கு
அறிமுகம் செய்து வைக்க..

குட்டிக் குட்டிக் கண்களுக்குள்..
எல்லைகளற்ற அண்டத்தை சுமந்து
குட்டி நிலா விழித்திருக்கிறாள்!

எனக்கு அறிமுகம் செய்தது போல்
குட்டி நிலாவுக்கு அறிமுகம் செய்கிறாள்!
பௌர்ணமி நிலவினை நிலா!

காத்திருப்பு..

வானம் இருண்டிருக்கு..
அவளோ வருந்தியிருக்கிறாள்!
நிலவைக் காணவில்லை..

கண்டு வந்து சொல்கிறேன்..
"கருமேகங்கள் கூடி இருக்கு.."
அவளோ ஏற்கவில்லை!

வானம் இருண்டிருக்கு
அவளோ காத்திருக்காள்!
நிலவோ மறைந்திருக்கு!

கண்டு வந்து சொல்கிறேன்..
வாடக் காத்து வீசியிருக்கு..
வாடியவளோ முகமலரவில்லை!

வானம் இருண்டிருக்கு
அவளோ பார்த்திருக்காள்!
நிலவை மேகம் மறைத்திருக்கு!

கண்டு வந்து சொல்கிறேன்
மழைக்கு வாய்ப்பிருக்கு..
அவளோ கண்ணீரை நிறுத்தவில்லை!

வானம் இருண்டிருக்கு
அவளோ அழுதிருக்காள்!
மேகம் அவளோடு இணைகிறது!
நிலவோ காத்திருக்கு
மேகங்களுக்கு மேலே அவளுக்காக!

கருவெளி ராச.மகேந்திரன்

நிலாப் பாதை!

நிலவைப் பிடிக்குமென்றதை..
நிலாவைப் பிடிக்குமென்று சொன்னதாய்
பிடிவாதங்கள் பிடிக்கிறாள்!

நிலாவையும் பிடிக்கும் - அதை
சொல்லாமலே வழியனுப்புகிறேன்!
“நிலா” அவள் செல்லவேண்டிய
பாதைகளை நானறிவேன்!
தூரங்கள் அதை நானறிவேன்!

அவள் பாதைகள் வேறு..
அவள் தூரங்கள் வேறு..

நிலவோடும் என்னோடும்
தீராக் கோபமும்
தீரவே தீரா அன்பும் கொண்டு
அவள் மட்டும் போகிறாள்
அவள் பாதையில்..
அவள் தூரங்களைக் கடக்க!

நிலவில்லா வானம்!

பள்ளி விட்டுத் திரும்புகிறாள்!
பத்திரமாய் பையிலிருந்து
பாதியில் நிறுத்தி விட்ட
நிலவை நிறைவு செய்கிறாள்!
தன் கையேட்டில்!

வண்ணங்கள் வேண்டி - ஓடி
வருகிறாள் என்னை நோக்கி!

வானில் நிலவில்லா - அந்த
அமாவாசை இரவில்
நிலவின் வண்ணம் என்னவென்று
வானத்தில் காண வெளியேறுகிறாள்!

முகம் வாடித் திரும்புகிறாள்
முகம் காட்டா நிலவுக்கு ஏங்கி..

பெரும் வாதத்திற்குப் பின்
மஞ்சளை தேர்ந்தெடுத்தாள்!
அவளுக்கு பிடித்த வண்ணம்
அது தான் என்று வர்ணனை செய்தாள்!

வாழ்த்துக்கள் சொல்லி..
என் அறை புகுந்தேன்..

மணி நேரம் கடந்து..
என் அறை புகுந்தாள்!
கண்களை மூடும்படியான
கட்டளையோடு!

கருவெளி ராச.மகேந்திரன்

கண்களை திறந்தால்..
காகிதமெல்லாம் கருமை..
அவள் தேர்ந்தெடுத்த
அந்த மஞ்சள் வண்ணத்தையும்..
அங்கிருந்த நிலவையும் காணோம்!

மாறாய்..
வெள்ளை நட்சத்திரங்கள்
மின்னிக் கொண்டிருந்தன..
கருப்பு வானமெல்லாம்!

நிலவு..
மூன்று நாளில் வருமென
செய்திகள் சொல்லி விட்டு..
நிலாவிடம் ஓடினாள்..
குட்டி நிலா!

வானில் நிலவில்லா..
அமாவாசை இரவிலும்
நிலாக்கள் நிறைந்திருக்கும்!
என் வீட்டில்..

நிலா என் இரசிகை

ஒரு பெருமழை இரவில்..
மின்னல்கள் ஒளி வீச..
இடிகள் இசை கூட்ட..
மொட்டை மாடியில்
நான் மட்டும் நனைகிறேன்!
நிலவு இல்லா இரவை - ஒளியால்
மின்னல் மீட்க முயன்றிருக்கையில்..

ஒரு வீடு தாண்டி..
அவன் வீட்டு மொட்டை மாடியில்
வானம் பார்த்து
கைகூப்பி வணங்கி கத்திக் கொண்டிருந்தான்!
வார்த்தைகள் அனைத்தையும்
இடியும் மழை ஒலியும்
கொள்ளையடித்துக் கொண்டன!

அவன் முகம் காட்டவாது
நிலவு வந்திருக்கலாம்..
வராத நிலவுக்கு வாடிக் கொண்டிருக்கையில்..
அடுத்து வந்த மின்னலில்
அவன் முகம் அறிமுகமானது!

அவனைப் பற்றி..
என் தாய் சொல்லக் கேட்டிருக்கிறேன்!
மறை கழன்றவனென்பார்கள்!
இரவெல்லாம் நிலவுப் பாட்டும்
பகலெல்லாம் பல பாட்டும்
பாடி அலையும் பரதேசி என்றார்கள்!

கருவெளி ராச.மகேந்திரன்

மின்னல் ஒளியில்
அவன் அப்படித்தான் இருந்தான்!

அப்போதே..
அவனை அழைத்தேன்! - அவன்
வரிகள் எனக்கு கேட்காதது போல்..
என் வார்த்தைகள் அவனை எட்டாமல்
இடியும் மழையும் தன் பணி
செய்து கொண்டிருந்தன!

திட்டம் தீட்டினேன்!
நாளை அவனை சந்திப்பதாய்!
நிறைவேறாத திட்டம் தான்!
இருந்தாலும் தீட்டினேன்!

நினைவுகள் பொல்லாதவை!
நினைத்த மறு நொடியில்..
என் தாய் வந்து அழைக்கிறாள்!

அவளிடம் கேட்கிறேன்..
முதன் முதலாய்
ஒரு ஆண் பற்றிய விபரங்களை!

அது ஒரு வைத்தியம் நிலா..
வெறும் "நாலு சொல்லில்"
புத்தகம் எழுதி இருக்கதா..
சொன்னாங்க.. என்றவாறு..
ஆணைகள் பல இட்டு விட்டு..
இரவு உணவுக்காக..
சமையலறை நுழைகிறாள்!

"நாலு சொல்லில்"
கூகுளில் தேடுகிறேன்!
எழுதியது என் தாய் சொன்ன
வைத்தியம்..
"கருவெளி" ராச.மகேந்திரன்!

உணவுக்கு அழைப்பதற்குள்
முடித்திடும் வேகத்தில்
பரபரக்கிறேன்..
அவசியமே இல்லை..
என்னைப் போன்ற அவசரங்களுக்காக
நான்கே சொல்லில்
எழுதி இருக்கு
அந்தப் வைத்தியம்..

சில நொடிகளில் முடியது
வார்த்தைக் கோர்வைகள்!
நீங்காமல் நினைவில்
நிலைத்திட துடிக்குது
வார்த்தைக் கோர்வைகள்!

நிலா!

இரவு உணவுக்கு அழைத்து விட்டாள்!
என் தாய் என்னை!
போக மனமில்லாமல் போகிறேன்!
மனதினில் அந்த வார்த்தைகள்
ஆக்கிரமிக்க மௌனமாகிறேன்!

உணவு உள்ளே செல்ல மறுக்க..
அம்மாவிடம்..
அனுமதி கேட்கிறேன்..
சந்திக்க வழி செய்வதாய்..
அப்பா உறுதி செய்கிறார்..
அதிசயமாய்!
அவரது அடுத்த புத்தகம்
"நிலவும் நீயும் நானும்" என்ற
புதுத் தகவலுடன்!
அவருக்குத் தமிழ் பிடிக்கும்!

நாளைக்காக.. காத்திருக்கிறேன்!
என்ன பேசுவதென்ற தயாரிப்புடன்!

நிலவு நிலவல்ல..

நிலவை
நிலவாய்க் காண
என்னால் இயலவில்லை!
நின் வருகைக்குப் பின்னே!

உன் பிரிவிலும்
உன் உறவிலும்
துணையாய் உறவின் உறவாய்
உடன் வரும் நிலவை..
நிலவாய்க் காண
என்னால் இயலவில்லை!
நின் வருகைக்குப் பின்னே!

நிலவு நிலவாகவும்
நிலவு நீயாகவும்
நிலவு என் உறவாகவும்
நின் வருகைக்குப் பின்னே!

கருவெளி ராச.மகேந்திரன்

நிலவும் நிலாவும் கன்னத்துக்குழிகளும்!

நிலவு பிடிக்கும்
நிலாவுக்கு!
என் கன்னத்துக் குழிகளும்
மிகப் பிடிக்கும்
நிலாவுக்கு!

கன்னத்துக் குழிகளின்
அழகுக்கென சில முறையும்..
வானத்து நிலவின்
அழகுக்கென பல முறையும்
என் கன்னத்தில் தான்
தன் இதழ்கள் பதிப்பாள்..
நிலா..

நிலவும் பிடிக்கும் - என்
கன்னத்துக் குழிகளும் பிடிக்கும்
நிலாவுக்கு!

நிலவும் நாங்களும் காலமும்

நிலவு இல்லா
வானம் கண்டாலும்..
வளர்ந்து வரும்
நிலவைக் கண்டாலும்..
வானம் நிறைந்திருக்கும்
பௌர்ணமி கண்டாலும்..
தேய்ந்து வாடும்
நிலவு கண்டாலும்..

அவள் நிலவுக் கதைகள் பேசுவதும்..
நான் நிலவுக் கவிதைகள் எழுதுவதும்..
அவள் நிலவு ஓவியம் தீட்டுவதும்
நான் நிலவுப் பாடல் பாடுவதும்

எங்கள் நாழிகைகளை
எங்களுக்கானதாய் படைத்தபடியே
எங்களுடனே களித்து பயணிக்கிறது
காலமும்!

கருவெளி ராச.மகேந்திரன்

முப்பொழுதும் நிலாவுக்குப் பிரவன்

யோசனைகள் தீர்ந்தபாடில்லை!
கைபேசி அழைப்புக்காக
எப்போதும் காத்திருந்ததில்லை!
அவன் கைபேசி அழைப்புகள்
நினைத்ததும் வந்து விடும்!

எட்டு ஆண்டுகள் ஓடி விட்டன
அவனை விட்டு வந்து..
என் மாறவில்லை என்ற தகவல்
அவன் கவிதைப் பக்கங்களில்
நிறைந்திருக்கிறது..
எல்லோருக்குமான செய்தியாய்!

வெகு நாட்களாகக் காணோம்..
எனக்காக அவன் பாடும்
நிலவுக் கவிதைகளை!

அவன் என்னிடம் பேசுவதாய்
கேட்டு வாழ்ந்திருந்தேன்!
அவனைப் பிரிந்திருந்த
இத்தனை ஆண்டுகளாய்!
இப்போது அவைகளையும் காணோம்!

இடைவெளிகள்..
இன்னும் இடைவெளிகளையும்
இடைவெளியில்லா நெருக்கத்தையும்
இதயத்திற்குக் கொடுத்து விடுகின்றன!

இரு மாதமாய் யோசித்தபடி இருக்கிறேன்
இதுவரை அவனை அழைக்கவில்லை!
இனியும் தாமதித்தால் அழைக்காமலே போகலாம்!

இச்செய்தி.. என் இல்லத்தாருக்கும்
பரவி பல நாட்களாயிற்று..
அவனால் நான் இழந்தது
என்னை மட்டும் தான்!
நானின்றி நான் நகர்த்திய
இந்த எட்டு ஆண்டுகள்..
வார்த்தைகளுக்குள் சிக்காதவை!

யோசனைகள் தீர்ந்தபாடில்லை!
என் தாய் என்னையறிந்து..
என் முன்னே.. வைத்துச் சொல்கிறாள்..
“நிலவும் நீயும் நானும்”
அவனது இன்னொரு படைப்பு..

இதயத்துடிப்பு..
இன்னும் இருமடங்காக..
தன் பயணத்திற்கு தடுமாறுகிறது!
சுய நினைவின்றி..
கைபேசி எடுக்கிறேன்..
அவனுக்கு அழைக்கிறேன்!

என் பெயர் இருக்காது..
என் எண் இருக்காது..
அவன் கைபேசியில்..
ஏற்பானோ? இல்லை..
மாட்டானோ?

எட்டு ஆண்டுகளில்
எப்படி மாறியிருக்குமோ?
என் மூளையின் மூலையெல்லாம்
அவன் குரல்களைத் தேடினேன்!

எதிர்முனையில்..
வணக்கம் என்ற வரவேற்புடன்..
குழந்தையின் குரல்..
பதில் வணக்கம் சொல்லவும் மறந்து..
அவன் பெயர் சொல்லிக் கேட்கிறேன்!

அம்மா..
“அவன் பெயர் சொல்லி”
அழைப்பு வந்திருப்பதாய்..
அக்குழந்தை கூப்பிடுகிறாள்
எதிர்முனையில்!

இணைப்பை துண்டிக்க
மனம் துடித்தாலும்..
இழப்பதற்கு ஒன்றுமில்லையென
காத்திருக்கிறேன்..

இன்னொருத்தி..
அவன் வாழ்வில்..
அவனைப் போன்றே
“வணக்கம்” என்றவாறு..
நான் நிலா பேசுகிறேன் என்கிறாள்!
என் பெயர் சொல்ல
அவசியமில்லாமல்..

இன்னொருத்தி
அவன் வாழ்வில்..
அதுவும் என் பெயரில்..

என் பெயர் சொல்லவும்
மனமின்றி..
அவனை விசாரிக்கிறேன்!

அவள் என் பெயர் கேட்கிறாள்!
நான் மௌனம் காக்கிறேன்!
மறுபடியும் கேட்கிறாள்..
என் மௌனம் கலைத்து

கண்ணீர் வடிகிறது..
என் விம்மல் அவளுக்கு
கேட்டிருக்கும்..
அவளே சொல்கிறாள்..
என் பெயரை!

என்னிடம் அவள் கேட்கிறாள்..
அவனைப் பற்றி..
என்னைப் பார்க்க.. புறப்பட்டதாய்
என்னிடமே சொல்கிறாள்!
புறப்பட்டு மூன்று ஆண்டுகளானதாய்
என் மூச்சை நிறுத்துகிறாள்!

அவன் என்ன ஆனான்?
"நிலவும் நீயும் நானும்"
புத்தகத்தை வெளியிட்டது யார்?
என் கேள்விகள் தொடருது.

முதல் கேள்விக்கு
இரு நிலாவிடமும் பதிலில்லை!
இரண்டாம் கேள்விக்கு
தானே என்கிறாள்!

அடுத்த பாகத்தை
உங்கள் சந்திப்பிற்கு பின்னே
வெளியிட வேண்டுமென்று
புறப்பட்டவர் திரும்பவில்லை!

மேசையிலிருந்த
முதல் பாகத்தை எடுக்கிறேன்..
அடுத்த பாகத்திற்கான
வெளியீட்டு நாளை..
அவனே சொல்லியிருக்கான்!

அது என் பிறந்த நாளில்..
ஆனால்.. ஆனால்..
அவன் குறித்திருக்கும் ஆண்டு..
அதுவே அதுவே..
ஆச்சர்யம்..
இந்த ஆண்டு..

நான் கேட்டிருந்த
எட்டு ஆண்டுகள் முடியும்..
இந்த ஆண்டு!

அவளிடம் தகவல்கள் கேட்கிறேன்..
இரண்டாம் பாகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் பெயரில்
என் பெயர்!
அவளுக்கும் தோன்றிக் கொண்டது
ஆச்சர்யங்களின் முடிச்சு!

இருவரும் திகைக்கிறோம்..
அவன் எங்கே?
அந்த தேதிகளை ஏன் குறித்தான்?
நான் ஏன் இன்றே அழைத்தேன்?

இருவரும் நேரில் சந்திப்பதாய்..
இணைப்பைத் துண்டிக்கிறோம்!
இனி அவனைக் காண்பதெங்கே?

இருக்கிறானென காத்திருப்பதும்
இருக்கிறானென விலகியிருப்பதும்
இல்லை எனும் போது
இயலாமல் போய் விடுகிறது!

கவனங்கள் தேவை..

கவனங்கள் தேவை..
பௌர்ணமி இரவோ..
நிலவில்லா
அமாவாசை இரவோ..
அவள் வருகைகள் நிச்சயம்..

கண் இமைக்கும் நேரத்தில்..
கன்னத்தில் - அவள் ..
இதழால் வரையும்
அந்த நிலவுப் பரிசுகளும் நிச்சயம்!
கவனங்கள் தேவை!

அவள் நிலவுக் கவிதைகள் கேட்கும்
ஒவ்வொரு முறையும்
கவனங்கள் தேவை!

நிலவும் நிலாவும் கலைஞனும்

ஒரு முழு நிலவுப்படம் வரையும்
சிறு பணிக்காகத் தான்
அவளுடனான என் சந்திப்பு!
அச்சந்திப்பு அரை மணி நேரத்தில்
அன்றே முடிந்தும் போனது!

சில மாதங்கள் கடந்து
மறுபடியும் வந்து சேர்ந்தாள்!
முழு நிலவு ஒளி வீசும்
தெரு ஒன்றை வரைய வேண்டி!!
அரை நாட்களுக்குப் பின்..
வரைந்து முடித்த ஓவியம் வாங்க
வந்து போன போது
அந்தச் சந்திப்பும் முடிந்து போனது!

இருவாரங்கள் கழித்து
நிலவுக் கவிதைகள் கேட்டு
என் அறைக்கே வந்து விட்டாள்!
கவிதைகள் புத்தகத்திற்கென்று
மறுத்து விட்டேன்!
அவள் வருகையை தவிர்க்க!

அவள் தாயிடம் சொல்லி..
என் தாயின் அனுமதியோடு
அதே கவிதைக்காக வந்து நின்றாள்!

ஓரிரு நாட்களில்
பள்ளிச் சீருடையோடு
நேரே ஓடி வந்தாள்
என் அறைக்கு..

எழுதும் என்னை
தொந்தரவுகள் செய்யாமல்..
சில மணி நேரங்கள்
காத்திருந்தாள்..
என் தாய் வந்தழைக்க
திடுக்கிட்டு திரும்பினேன்!
அவளைப் பார்த்ததும்
அத்திடுக்கிடல் அதிகமானது!

கவிதைக்கான பரிசு!
பள்ளியில் கொடுத்தது என
என்னிடம் நீட்டினாள்!
அது உன் கவிதை..
இது உன் பரிசு என்றேன்!

கவிதை என்னதா? என்றாள்
கண்களில் கவிதை பாடியபடி!
ஆம்.. என்றேன்..
இந்தப் பரிசு என்னதா? என்றாள்!
ஆமென தலையாட்டினேன்!

சந்தோசம்..
அவள் கண்களெங்கும்!
அவள் அங்கமெங்கும்!

இருந்தும் கேட்டாள்..
எழுதினது நீங்க தானே?

நீ கேட்கவில்லை என்றால்
அக்கவிதை பிறந்திருக்காது என்றேன்!
இருந்தும் சமாதானமாகாமல்
என்னிடமே பரிசை தந்தாள்..

அந்தப் பரிசுப் பொருளுக்கான இடம்
அவள் வீட்டில்..
கொஞ்ச நாள்..
என் அறையில்
கொஞ்ச நாளென
சமாதான ஒப்பந்தமானதும்
நிம்மதி பெருமூச்சுடன்
சிரித்தாள்!

நாட்கள் கடந்தோடின..
தான் வரைந்த நிலவோடு..
என்னைப் பார்க்க வந்திருந்தாள்..
நிலா..

மிகவும் பிரகாசமாய்..
மிகவும் அழகாய்..
அவள் கண்களென
அவள் வரைந்த வானத்தில்..
அந்த ஒற்றை நிலா
ஒளி வீசிக் கொண்டிருந்தது!

இன்னொரு நிலவுக் கவிதை
அவளுக்குப் பரிசளித்தேன்!
இன்னொரு கலைஞி பிறந்து விட்டாள்!

தன் படைப்பினை
அவள் வர்ணித்தாள்..
அவள் சொல்லும்
நிலவுக் கவிதை..
என்னிலும் சிறப்பாய்..

மாபெரும் கலைஞி ஒருத்தி
அவையேதும் அறியாமல்
என் கவிதை கிட்டியதற்காய்
மகிழ்ந்த படி தன் தாயிடம் ஓடுகிறாள்!

மழலைகள்
படைத்தும் படைப்பாளிகளாய்
எண்ணாமல் வாழும் கடவுள்கள்!

அவள் ஓடும் வழியெல்லாம்
ஒளி பரவி இரவும் விடிந்தது!
வானத்து ஒற்றை நிலா
அவள் கையில் மகிழ்ந்திருந்தது!

அவள் இதழ் வரைந்த

அந்த வானத்து நிலவு
அதன் ஒற்றை உறவான
இப்பூமியை குளிர்வித்திருக்க..

என் அங்கமெல்லாம்
அனுதினமும் குளிர்வித்திருக்கு..
அவள் இதழ் வரைந்த நிலவுகள்!

கருவெளி ராச.மகேந்திரன்

மதியின் படை

குளிரூட்டப்பட்ட பெட்டியில்
கம்பளிக்குள் உறக்கம்
சுகமானது தான்!
உடல் வெப்பம் முழுவதும் குறைந்து
நடுக்கமெடுக்க துவங்கும் வரை!

இரயில் பெட்டிகளில்
பாதுகாப்புக் கருதி..
குளிரூட்டப்பட்ட பெட்டியில் பயணிக்க
அவனே அறிவுறுத்தி இருந்தான்!

அடுத்த ஐம்பதாவது நிமிடத்தில்
அவனும் அதே பெட்டிக்குள்
வந்து விடுவான்!
அதை நினைத்து நினைத்து
என்னை வெப்பப்படுத்திக் கொண்டிருந்தேன்!

பணி நிமித்தமாக
என் ஊர் விட்டு
என் மாநிலம் விட்டென
எங்கு என் பயணம் தொடர்ந்தாலும்
என்னுடனே பயணிக்க
அவன் மட்டும் இருந்தான்!

எனக்காக
அவனது பணி மாற்றங்களை
ஒரு போதும் விரும்பியதில்லை!
ஆனாலும் பிடித்திருந்தது!
அவன் எனக்கென செய்யும்
அத்தனையும்!

இன்னும் இரண்டு நிமுத்தங்கள்..
அதன் பின்னே
அவனை சந்திக்கப் போகிறேன்!

முதல் முதலாய்
பணிக்காக தேடி அலைந்த காலத்தில்
அறிமுகமானவன் அவன்!

பிறை நிலவன்..
அவன் பெயர்..
அவனது பெற்றோர்
நிலவின் இரசிகர்களாக இருக்கணும்!
என் பெற்றோரைப் போன்றே!

மதியழகி என
என் பெயருக்குப் பின்னே
பயணியர் பட்டியலில்
அவன் பெயர் படிக்கையில்
உள்ளுக்குள் ஓர் பூரிப்பு!
உடலெங்கும் ஒரே பூரிப்பு!

இந்தப் பயணத்தில்
அவனிடம் கேட்டு விட
மனதில் துடித்துக் கொண்டிருக்கும்
ஒற்றைக் கேள்வியோடு
காத்திருக்கிறேன்!

கடந்த மூன்று ஆண்டுகளாய்
அந்தக் கேள்வி
எனக்குள்ளேயே காத்திருக்கிறது!

மதி போல்
தேய்ந்தும் வளர்ந்தும்
அவன் நினைவுகள்
என்னோடு பயணித்திருக்க..

கம்பளிக்குள்
அவன் நினைவுகளையும்
சேர்த்துப் போர்த்திக் கொண்டேன்!

முதல் நிறுத்தம்
வண்டி நின்றது!
எனக்கு பலமுறை
எச்சரிக்கை செய்திருந்தான்!
இந்த இடம் பாதுகாப்பற்றது என!
பல பெண்கள் கடத்தப்பட்டது
கற்பழித்து கொலை செய்யப்பட்டதென
இந்த நிறுத்தத்தின் நிகழ்வுகள்
உள்ளுக்குள் கிலியை அதிகரித்தன!

சில மணித்துளிகளில்
இரயில் வண்டி புறப்பட்டது!
கொஞ்ச நேரம் காணாமல் போயிருந்த
குளிர் என் பாதங்களை
மீண்டும் வெப்பம் வேண்டச் செய்தது!

அந்த நிறுத்தத்தில்
யாரும் ஏறவில்லையென
நினைத்திருக்கையில்..
கதவுகள் தடாலென
சாத்தப்பட்ட சத்தம்..
இதயத்துடிப்பை இரட்டிப்பாக்கியது!

கைபேசியை எடுத்தேன்!!
அவளை கைபேசியில்
அழைத்திட எண்ணி!
என் நேரம் என்னிடமில்லை..
என் கைபேசி சிக்னலை
தேடிக் கொண்டிருந்தது!

ஒன்றுக்கு மேற்பட்ட
காலணிகளின் சப்தம்
என் மூச்சின் வெப்பத்தை
என் கம்பளிக்குள் பரப்பி
முழுவதும் வெப்பமாக்கியது!

அத்தனை காலணிகளும்
என் பெட்டியை நோக்கி வருவதாய்..
என் செவி சொல்வது
என் மூளை எண்ணுவது
அத்தனையும் பொய்யாயிருக்கணும்!
உள்ளுக்குள் வேண்டிக் கொண்டேன்!

வந்தவர்கள் வேறு மொழியில்
பேசிக் கொண்டார்கள்!
ஓரளவுக்குப் புரிந்தது..
அவர்கள் தேடுவது..
அவர்கள் இச்சை தீர்க்க
ஒரு உடலைத் தான்!
அந்த அறை முழுவதும்..
போதை பொருட்களின் நாற்றம்
பரவியது..

ஒளிய வழியின்றி..
ஒளிய இடமின்றி..
கம்பளிக்குள் ஒளிந்திருந்தேன்!
என் கம்பளி இழுக்கப்படுகிறது..
ஓங்கி குரலெடுத்து கத்துகிறேன்!

இருக்கும் மக்களெல்லாம்
அசையாமல் அப்படியே இருக்கிறார்கள்!
அம்மிருகங்களின் கரங்களில்
கத்திகள் மினுமினுக்கின்றன!

என்னைக் காக்க
நான் மட்டும் இருப்பதாய்!
நானும் இல்லாததாய்!
இதயம் இன்னும் வேகம் பிடிக்கிறது!

முதல் அடி எனதாயிருக்கட்டும்
முடிவு தெவானாலும்..
போன வருடம்
பிறை நிலவனோடு கற்ற கலை
முதல் அடி.. என் முன் நின்றவனின்
தொண்டைக் குழியில்..
அவன் அப்படியே வீழ்கிறான்!

நான் மதியழகி
எனைக் காக்க நானே போராடுவேன்!
அடுத்த உதை
பக்கவாட்டில் நின்றிருந்தவனின்
நெஞ்சுக் குழியில்!
மற்றவர்கள் பின் வாங்கினர்!

பிறகென்ன..
அத்தனை பெட்டி மக்களும்
என் பக்கம் தான்!

யாருக்காக..
எந்த ஆயுதங்களுக்காக
அஞ்சினார்களோ?
அத்தனையும் துவம்சம்!

இரயில் காவல் துறை..
வழக்கம் போல்..
எல்லாம் முடிய வந்தது!

இரயில் நின்றது..
அச்சத்தில் யாரோ..
பாதுகாப்புக்காக நிறுத்தியிருக்கணும்!

மதி..
மதி..
மதியழகி..
பிறை நிலவன் குரல்..
திரும்பிப் பார்த்தேன்..
நெற்றியில் முட்டி
கண் விழித்தேன்..
நெற்றியைக் காப்பாற்றிய
கம்பளிக்கு நன்றியுடன்!

அதுக்குள்ளேயும் தூக்கமா?
ஆமா! மன்னிக்கணும்..
நேத்து சரியா தூங்கல..

என் உடல் வேர்த்திருந்தது
என் கைகள் இறுகியிருந்தன

நிலவனின் புன்னகையொன்றை
எனக்குத் தந்து
தன்னிருக்கை போயமர்ந்தான்!

பேச வேண்டுமென்றேன்!
அந்த வார்த்தை
என் உதடுகளைத் தாண்டவில்லை!
என் செவிக்கும் கேட்கவில்லை!

அவன் கீழிறங்கி விட்டான்!
என் தூக்கம் எங்கோ காணாமல் போனது!
எனக்குள் மீண்டும் துடிதுடிப்பு!
நான் மட்டுமே அறிந்த புரிப்பு!
நான் நினைத்தாலும் அவனுக்கு கேட்குது!

குளிரூட்டப்பட்ட அறைகள் கடந்து
வெளியேறினோம் இருவரும்!
கனவில் என்னோடு சேர்ந்து
சண்டையிட்ட அத்தனை கண்களும்
எங்களையே பார்த்திருந்தது!

திறக்க வேண்டாமென்ற கதவை..
என் வேண்டுகோளுக்காக திறந்தான்!
பேச்சைத் துவங்க
நிலவின் துணை வேண்டியே
கதவுகளை திறக்க வேண்டினேன்!

திறந்திருந்த கதவு நோக்கி நடந்தேன்..
அவன் நிலவைப் பார்த்திருந்தான்!
நிலவா, நான் கேட்கவா என்றேன்!
வேண்டாம் மதி..
நீ வீட்டுக்குப் போ..
நானே வருகிறேன் என்றான்!

அவன் அவ்வார்த்தையை முடிப்பதற்குள்
அவன் கரங்களை நான் பிடித்திருந்தேன்!
அவன் கரங்களின் வெப்பம்
அதிகமாகி வளர்வதாய் உணர்ந்தேன்
அவன் முகம் நிறமாறின!

இரயில் பெட்டியின் வேகம் குறைந்தது!
அவன் பார்வை.. வானத்திலில்லை
மதியிலில்லை..
மதியழகி மேலுமில்லை!

அவன் பார்வை வழியே..
நான் காண்பது நிஜமா?
எட்டு பேர் கொண்ட கும்பல்
இரயில் பெட்டியை நோக்கி
ஓடி வந்து கொண்டிருந்தது!

என் கரங்களிலிருந்து..
விடுவித்துக் கொண்டவன்..
கரங்களில்
தோட்டாக்கள் நிரப்பப்பட்ட
கைதுப்பாக்கி இருந்தது!

இனி காத்திருக்க நேரமில்லை!
என் கைத்துப்பாக்கிக்காக
என் கம்பளிக்குள் உறங்கும்
கைப்பையை நோக்கி ஓடினேன்!

இம்முறை அனைவரையும்
உயிரோடு பிடித்திட வேண்டும்!
நினைப்பதற்குள்..
அவன் துப்பாக்கிச் சத்தம்..

எங்கள் திட்டங்களை..
எப்படி அவர்கள் அறிகிறார்களென
இதுவரை தெரியாது!

ஆனால் இன்றைய திட்டமிடலில்
மதியின் மதி இருந்தது
நிலவனைத் தவிர
எவருக்கும் தெரியாது!

அமைதியாக அத்தனை இரவிலும்
ஏதுமறியா பெண்கள்
சீரழிக்கப்படுவதற்கு சாட்சியாய் இருந்த
வானத்துப் பிறை இன்று
தன் கறை துடைக்க..
மேகங்கள் கடந்து வந்து..
ஒளி வீசிக் கொண்டிருந்தது!

இரவில் முழுவதுமாய் நின்றிருந்தது!
அத்தனை பேரையும் சுற்றி வளைத்திருந்தோம்!
நிலவனுக்கு உடன்பாடில்லை!
அவர்களை உயிரோடு பிடிப்பதில்!
எனக்கும் தான்!

எல்லோர் நெஞ்சிலும் அதுவே
ஓடிக்கொண்டிருந்தது!
"கூட்டத்தில் ஒருவன்"
கத்தியை வீசி..
எறிந்திருந்த எண்ணங்களில்
எண்ணையை ஊற்ற..
"துப்பாக்கியை எடுத்த ஒருவன்"
பெட்ரோலையே ஊற்றி விட்டான்!

அத்தனை பெண்களின் பிரதிநிதியாய்
நான் மட்டும் நின்றிருந்தேன்!
பெரும்பாலானோரின் கைத்துப்பாக்கி
என்னிடம் இருந்தது!

விசாரித்திடு என்று மதி சொன்னாலும்..
நிலவனின் துப்பாக்கியிலிருந்து
முதல் குண்டை புறப்படச் செய்தேன்!
விழுந்தவன்..
நெற்றியை ஊடுருவும் தோட்டாக்கள்
என்னைப் போல் இரக்கமற்றிருந்தன!

துப்பாக்கிகள் கைமாற்றும் நேரம் தான்
ஒவ்வொருவருக்குமான இடைவெளியும்!
அம்மிருகங்கள் அஞ்சவில்லை சாவிற்கு..
பதிலாய்..
ஏளனமாய் சிரித்திருந்தன..
என்னைப் பார்த்து!

நிலவு இன்னும் பிரகாசமானது..
மதியழகி நானும் கொஞ்சம் அழகானேன்!
நிலவன் கண்களில்
இன்னும் எரிந்து கொண்டிருந்தது நெருப்பு!
நிறைந்திருந்தது தேடல்!

அடுத்த மாறுதல் எங்கோ?
அவனுக்கும் எனக்கும்!
எங்கிருந்தாலும் எங்களோடு இருக்கும்
பூமி தாண்டிய ஒற்றை உறவான..
நிலவு!
எங்களோடு!

கருவெளி ராச.மகேந்திரன்

நிலவும் அவளும் நானும்

பிடித்துத் தரக் கேட்டு
இடைவிடாது அடம் பிடிக்கிறாள்!

தோள்களில் தூக்கி வைத்தும்
தானே பிடிக்க முடியாமல் தவிக்கிறாள்!

மொட்டை மாடிக்கு ஏறியும்
எட்டாமல் கைகளை நீட்டி கதறுகிறாள்!

எப்படியாவது அவள் கைகளில்
அந்த வானத்து ஒற்றை நிலவை சேர்க்க
அவளோடு நானும் முயற்சிகள் செய்கிறேன்!

கவி நிலவனும் மதிமாறனும்

ஊரோடு உலகும்
உறங்கும் வேளையிலே
உன் அழைப்புக்காக
உள்ளம் ஏங்கி நான் மட்டும்
காத்திருப்பேன்!

வராமல் போன இரவுகள்
அழைப்பு வராமல் போன இரவுகள்
ஏதுமில்லை இந்நாள் வரை!
நீ அறிமுகமான நாள் முதல்!

இன்றைய தாமதம்..
இதயத்துடிப்பை இடறச் செய்தது!
தாமதம் தவிர்க்க
என்னைப் போல் தனித்திருக்கும்
நிலவிடம் உரையாடிக் கொண்டிருக்கிறேன்!

என் உரை எங்கும்
உன்னைப் பற்றி தான்..
உன் நினைவுகள்
எனக்குள் ஆழமானது என்றிலிருந்து?
அத்தனையும் அறியாமல் நடந்து
உன்னை என் வாழ்வாக்கி விட்டது!

நிலவுக்குப் பின்
எனக்குக் கிடைத்த
என் இதயம் கேட்கும்.
ஒற்றை உறவு நீ தான்!

கருவெளி ராச.மகேந்திரன்

நினைவுகள் நிலை தடுமாறி நிற்க..
உன் அழைப்பு வருகிறது..
எதிர் முனையில் கேட்ட குரலை
என் செவிகள் இதுவரை கேட்டதில்லை!
அது உன் குரலில்லை!
ஆனால் அக்குரல் பதட்டத்துடன்
நிகழ்ந்த இடத்தைச் சொல்கிறது!

பதில்கள் ஏதுமின்றி..
பதறிக் கிளம்புகிறேன்!
அரசு மருத்துவமனையின் வாசலில்..
முதன் முதலாய் நுழைகிறேன்!
மருந்து வாசனைகள் பிடிக்காது!
மருத்துவமனையில் என் தாயை
பிறந்ததும் பலி கொடுத்தேன் என்ற
செய்தி எனக்கு கிட்டிய நாள் முதல்!

இரத்தம் கண்டால்
என் இதயம் துடிப்பை இழக்கும்
அச்சம் பற்றிக் கொள்ளும்..
விபத்தொன்றில் தந்தை
இரத்தத்தில் மிதக்க கண்ட
அந்த நாள் முதல்!

ஓராயிரம் உடல்கள்
உயிர் மட்டும் சுமந்து
நிமிடங்களை நகர்த்திக் கொண்டிருக்க!
என் கண்கள் உன்னை மட்டும்
தேடியபடி உள்ளே நுழைந்தன..

இருக்கும் ஒரு சொந்தத்தையும்
எப்படி இழப்பேன் நான்?
எப்படி நிகழ்ந்ததென சொல்ல
ஒருவருமில்லை அங்கே!

ஓடோடி வந்து..
உள்ளே நுழைகிறேன்!
முழுமதியென உன் முகமிருக்க..
உனக்கு உதிரம் கொடுத்திருக்கான்
நீயும் நானும் அறியா ஒரு சகோதரன்!

வலக்கை கொடுப்பதை
இடக்கை அறியாமல்
வலக்கையில் உனக்கும்
என் வாழ்வுக்கும் உதிரம்.கொடுத்தபடி!
தன் இடது கையில்
உன் கைபேசியை உயர்த்தி சொல்கிறான்
சிஸ்டர், ப்ரோவோட மொபைல்!

நல்லவேளை ICE ல
உங்க நம்பரை கொடுத்திருந்தாரு..
இல்லனா
இன்னைக்கு நா கால்சென்டர்
ஆரம்பிக்க வேண்டியதாயிருக்கும்!

அவனே தொடர்ந்தான்..
நான் மதிமாறன்..
ப்ரோ.. மேல தப்பில்ல..
சிகப்பு லைட்ட மதிக்காம
வேகமா வந்த காருக்காரன் தான்
தட்டிட்டு நிக்காமப் போயிட்டா..

நம்பரை நோட் பண்ணி..
100க்கு சொல்லியிருக்கேன்..
பிடிச்சுடுவாங்க..

நன்றி என்ற ஒரு வார்த்தையில்
அவனுக்கு எனது மனதைச் சொல்லிட
ஒரு போதும் முடியாது..
இருந்தும் உடைந்த குரலோடு
நன்றி மதி என்றேன்..
சிஸ்டர்.. இதெல்லாம்..
சிம்பிள் மேட்டர்..
டோண்ட் ஒரி..
ப்ரோ.. இப்ப முழுச்சிடுவாரு.

அவன் என் வாழ்வை
என்னிடம் திருப்பிக் கொடுத்துள்ளான்!
அது போன்ற எந்த எண்ணமுமின்றி..
அவன் வார்த்தைகள்!
அது கவி நிலவனை நினைவுபடுத்தியது!
உடன் பிறந்த உள்ளங்களால் மட்டுமல்ல
உடன் பிறவா உள்ளங்களாலும் தான்
உலகம் இயங்கிக் கொண்டே இருக்குது!

கவி நிலவனால்..
நிலா நான் இன்று அவனோடு..
மதிமாறனால் இன்று
கவி நிலவன் மீண்டும்
என்னோடு!

ஓரிரு மணி நேரங்கள்
உருண்டோட..
கவி நிலவன் கண் விழித்தது
என் முகத்தில் தான்!

அவன் விழிகளில்
மறுபடியும் என் வாழ்வு
விழித்தெழுந்தது!

எனக்கு அவனிருக்கான்..
அவனுக்கு நானிருக்கேன்..
எங்களுக்கு வானத்து நிலவும்..
நானிலமெங்கும் நல்மனங்கள்
நிறைந்திருக்கின்றன!

அதே நம்பிக்கையுடன்..
அவனோடு புறப்பட்டேன்!
“108” எண் சுமந்த வாகனங்கள்
பல உயிர்களை மீட்டெடுக்க
தொடர்ந்து பயணித்திருந்தன!
அன்று இவ்வசதி இருந்திருந்தால்..
என் தந்தை என்னோடு இருந்திருக்கலாம்..
என் தாய் என் மனம் கேட்டு..
என் வாழ்க்கை பயணத்தை துவங்கியிருக்கலாம்!

விளக்குகளின் ஒளியால் மறைந்திருந்த..
நிலவு ஒளியால் பிறந்த
அவன் நிழல் தழுவும்
என் நிழல் போலவே
அவனை மௌனமாய் தொடர்ந்தேன் நானும்!

என்னை என் அறையில் விட்டு
அவன் இருப்பிடம் புறப்பட்டான்
இன்னும் இரண்டு ஆண்டுகள்
அவனுக்காக..
நானும் அந்த நிலவும் காத்திருக்கனும்!

இரகசியம் இது!

அவளுக்கு நிலாவென
பெயர் வைத்தது யார் குற்றம்?
எழுதிய கவிதையெல்லாம்
எனக்குச் சொந்தமென
என்னிடமே முறைத்து நிற்கிறாளே!

இரகசியம் இது..
உண்மையில்
சில கவிதைகளல்ல
பல கவிதைகள் அவளுக்கே சொந்தம்!
அவளுக்கென படைத்ததால் அல்ல..
அவளே படைப்பிற்கு காரணமென்பதால்..

ஆனாலும் அவளிடம் சொல்லாதீர்கள்!
இரகசியம் இது!

நிலவும் நிலாவும் வெண்ணிலா பாட்டி!

கருவறையில் இருந்தது போதுமென
உலகம் காண துடிக்குது
அந்தச் சிசு..

ஆடிக்காத்தில் மேற்க்கூரை இழந்த
அந்த இல்லத்தில்..
அவள் வானத்து நிலவையும்
அந்த வானத்து நிலா அவளையும்
அன்போடு பார்த்திருக்க..

அரசு மருத்துவமனையோ
தனியார் மருத்துவமனையோ இல்லா
அந்தக் கிராமத்தின் பிரசவப் பணி
பிரசவம் பார்க்கத் தெரிந்த
வெண்ணிலாப் பாட்டியிடம் இருக்கிறது!
அவளுக்குப் பின்னே
அந்த ஊரில் பிரசவம் பார்க்க..
அந்த வானத்து நிலவைத் தவிர
வேறு ஒருவரும் இல்லை..

அந்த வானத்து வெண்ணிலா..
பிரசவத்தை வேடிக்கை பார்த்திருக்கும்!
வெண்ணிலாப் பாட்டியின் கரங்களோ..
தாயையும் சேயையும் உயிரோடு
மண்ணுக்கு மீட்டெடுக்கும்!
இருவரின் சாட்சியமும்
வேண்டும் இம்மண்ணுக்கு!

மருத்துவமனைகள்..
ஊர்க்கிழவிகளின் மருத்துவத்தை விஞ்சி..
தாய் சேயை மீட்டெடுத்து சாதித்தன..
கொஞ்சமாகவும் மிக அதிகமாகவும்
பணம் பெற்றுக் கொண்டு!

பாவம் வெண்ணிலாப் பாட்டிகள்
ஒரு நேரக் கஞ்சிக்கும்
ஒரு நேர வெத்திலை பாக்கிற்கும்
தாயையும் சேயையும்
நமக்கென மீட்டெடுத்து வாழ்ந்திருந்தனர்!

அவர்கள் கையில்
உயிரிழந்த அன்னையர் பலர்..
மண்ணைக் காணா.. சிசுக்கள் பல..
ஆனாலும் வியாபாரம் ஏதுமில்லை..
அந்த வெண்ணிலாப் பாட்டிகளுக்கு..
எந்த அன்னையிடமும்.. சிசுவிடமும்

அரசு நம் பணத்தில் கட்டியிருந்தாலும்
நாம் கட்டிய பணத்தில்
கட்டிய கல்லூரியில் படித்து வந்தவன்
கட்டிய மருத்துவமனையானாலும்..
வருமானத்திற்காக..
தாயின் வயிற்றை கிழித்து..
சேயையும் தாயையும் காத்ததாய்
பறை சாற்றி வியாபாரம் பின்னவன் செய்கையிலே..
அத்தனைக்கும் கையேந்தும்
படித்த படிக்கா பிச்சைக்காரர்களால்
மலிந்திருந்தது முன்னது!

பாவம்..
எந்த வீட்டிலும்..
எந்த ஊரிலும்..
வெண்ணிலாப் பாட்டிகள் இல்லாமல்
வேடிக்கை பார்க்க வரும்..
வானத்து வெண்ணிலவும்
வெறுமனே சுற்றித் திரிகிறது
வானத்தில்!

நிலவும் கவினும் நானும்

அவனுக்குத் தெரிந்தது
ஒரு சொல்..
அம்மா..

அடுத்த சொல்..
அவன் கற்றது..
மா..
அதையே இருமுறை சொல்ல
அவன் சொல்வதாய்
அவன் தாய் அழைத்து சொல்வாள்..
அவள் தன் அண்ணனிடம்..
உன்னையே நினைச்சுகிட்டு இருக்கான்..
எப்போ வருவ பார்க்க?

மூன்றாவதாய்
அவனே அழைத்த உறவு..
நிலவு..

அட, தமிழ் சொல்லும்
பள்ளியிலும் தமிழ் சொல்லும்
தாய் கிடைத்தால் வேறென்ன கவலை?
நிதமும் நிலாப் பாட்டுடன்
இரவு உணவு அவனுக்குக் கிட்டும்!

ஊர் சென்ற போது..
அழைத்து அழைத்து அறிமுகம் செய்வான்..
மா..
நிலா.. என்று..
வானம் காட்டியபடி..

அவன்.. மா.. என்றால்..
அவன் தாயும்..
தாயின் தாயும்..
அதோடு.. தாயின் அண்ணனும்
வந்து நிற்போம்..

அனைவருக்கும்
அவன் செய்வான் அறிமுகம்..
இரவும் பகலும்
வானத்து நிலவை..
ஆகாயத்தை கைகாட்டியபடி!

அவனுக்கும் வைத்திருக்கிறார்கள்
அழகாய் பெயர் ஒன்று
கவின் என்று!

பல சாமிகள் கடந்து
வந்தது தான்..
அந்தப் பெயரும்!

மண்ணாத்தாள்!

இரவுப் பயணத்தின் போதெல்லாம்
என்னோடு துணை வரும் நிலவும்
இன்று வானத்தில் இல்லை!

ஆண்களுக்கும் பாதுகாப்பில்லா
இரு மைல் தூரம்
இதயத்தின் துடிப்பை
இப்போதே நிறுத்திக் கொண்டிருந்தது!

நீரில்லா காலத்தில்
ஓடையின் வழியே போவது வழக்கம்!
கணுக்காலளவு நீரோடும்
இந்த காலத்திலேயும்
இந்த வழியே வந்தது
இன்னும் மூணு மைல் தூரத்தை
இலகுவாகக் கடக்கத்தான்!

தாலி கட்டியவன் போன பின்னே..
தாலி அறுத்தவளுக்கு
இருக்கவும் இடமில்லை..
போகவும் இடமில்லை..
இந்த மண்ணில்!

மழை பொய்த்து..
மண் பொய்த்து போன பின்னே..
எலி சேர்த்த உணவை
திருடித் திண்டும்
எலிக்கறிகள் திண்டும்
வாழ்வை ஓட்டியிருந்தோம்!

எப்போதும் உள்ளம் உடையாதவன்
தலை தொங்கி இல்லம் நுழைய
நான் நொந்து விட்டேன்!

தேற்றுபவனை தேற்ற
என்னால் ஆகாமல்..
தேம்பித் தேம்பி அழுதிருந்தேன்!
இந்த மண் என் சிந்தைகளை
பெரிதாய் மாற்றி வைத்திருந்தது!

என் கண்ணீர் துடைக்க நீண்ட
அவன் கரங்களெல்லாம் இரத்தம்..
கட்டி வைத்து அடித்திருக்கிறார்கள்!
தாழ்ந்த சாதிக்காரனுக்கு
நிலமெதற்கென!

நிலத்தை உருவாக்கியவன்..
வாழும்.. விளையும் நிலமாய்
நித்தம் பாடுபட்டு உருவாக்கியவன் அவன்!
அவன் ஆனான்..
தாழ்ந்தோரிலும் தாழ்ந்தவனாய்!
ஆள் வைத்து அடித்துப் பறிப்பவன்
ஆள்பவன் ஆனான்!
அதுவே தரம்மானது இம்மண்ணில்!

பல தலைமுறைகள் உழைத்து
இவர்கள் உருவாக்கியதை..
வறுமையென சொல்லி..
ஒரு படிக்கும்
ஒரு மரக்காலுக்கும்
அடித்துப் பறித்தார்கள்!

மறுத்தவர்கள் மறுநாள்
மொட்டைக் கிணறுகளில்
தற்கொலை செய்ததாய்
தலை தெறிக்க சிதறிக் கிடந்தார்கள்!
அடையாளம் காட்ட..
அவர் தம் உறவுகள் போல..
நானும் போகத்தான் செய்தேன்!

இனியும் பொறுத்தால்
பூமி பொறுக்காது..
இடுப்பில் இரு கதிரருவாள் சொருகி..
இதயத்தில் நீதிக்கான தர்மம் செய்ய
இதோ..
நிலவில்லா வானத்தில்
கண் சிமிட்டும் விண்மீன்கள்
வழி காட்ட..
நான் மட்டும் போறேன் தனியே..
அமைதியாய் ஓடும் ஓடையை
எழுப்பியபடி!

நாளைக் காலை..
நம்மவர் நிலங்கள் நம் கையில்..
நடை பாதையில்..
நரிகளாய் அவர்கள் காத்திருக்க..
வழிகளில்லா வழியில்
ஓடையைக் கடக்கிறேன்!

அவன் கொலை..
அதுவே இருக்கட்டும்..
கடைசியாய்..
உள்ளத்தின் வேகம்..
கால்களை முன்னோக்கி நகர்த்த..
நள்ளிரவுக்குள் பிறந்த ஊர் வந்தேன்!

வந்த கோலம் கண்டதும்
பெற்ற மண் கதறி விட்டது!
அவன் உதிரம் என் நாசியெல்லாம்
நின்று நினைவுபடுத்திக் கொண்டிருந்தது!

பழி வாங்க அல்ல..
நீதி சொல்ல என
ஊர்ப் பெரியவர் சொல்ல..
ஊரெல்லாம் தலையாட்டிப் புறப்பட்டது!

உழைப்பவர் உரிமையை மீட்க..
அடிமைத்தனத்தை அடியோடு ஒழிக்க
ஆதிக்கத்தை மண்ணோடு புதைக்க
நிலாவோடு புறப்பட்டது
நீதி சொல்ல..

நிலவில்லா வானத்தில்..
ஆயிரம் கண்கள் கொண்டு பார்த்திருந்தன
விண்மீன்கள் சாட்சியாய்!

உழைத்தவனை சுரண்டி வாழ்பவன்
உயர்ந்தவனாவது எப்படி?
அவன் உள்ளம் அமைதியாகாமல்
கேள்விக் கணைகளைத் தொடுத்து தொடர்ந்தது!

விடியற்காலையில்..
கதிரவனுக்கு விடியல் பிறக்கும்..
இம்முறை கதிரவனும்..
சமத்துவ பூமியில் கதிர் வீசும்..
நாளை வரவிருக்கும் நிலவும்..
சமத்துவம் விரும்பும் உள்ளங்களுக்கு
குளிர் வீசும்!

பெய்யென பெய்யும் வானத்திலிருந்து
பெரும் வெள்ளம் வந்ததும்
குட்டைகள் என்னவாகும்?
குளங்கள் என்னவாகும்?
ஓடைகள் தான் என்னவாகும்?
தடுக்க நிற்கும் அணைகள் தான் என்னவாகும்?

நிலாவின் அமைதி..
அவனுக்காகவும்..
அவன் ஊருக்காகவுமானது..
அவள் இரவுகளையும்..
விடியச் செய்யும் புரட்சிக்காரி!
பிறந்த மண்ணில்!

புகுந்த வீட்டில் காத்திருந்த
அமைதி..
அவனுக்காக பொறுத்திருந்தது
அவளையே இல்லையென்றாக்குமென
அந்நொடி வரை..
அவளால் ஏற்கமுடியவில்லை!

அடித்துப் பறித்தவன்..
அனைவரின் முன்னே கைகட்டி..
நயவஞ்சகமாய் நாடகங்கள் போட்டான்!
தற்கொலை செய்தவருக்கு
தானங்கள் தருவதாய்
கருணை மழை பொழிந்தான்!

வந்த ஊரும் புரியாமல் விழித்தது
உள்ளூரும் திகைத்து விழித்தது
அவள் இதயம் அவன் வார்த்தைகளை
அந்த நயவஞ்சகங்களை நிறுத்தச் சொன்னது!

அவன் குரல்வளைகள்
நஞ்சை காற்றில் பரப்பிட..
அவள் நாசியில் மூச்சுத் திணறல்..
அவள் உயிர் காக்க..
அம்மண்ணின் நீதி காக்க..
அவளது கடைசி எச்சரிக்கைக்கும்
அவன் மறுத்துப் பேசினான்!

அவள் கணவனுக்காக..
நிலத்தை தானே வாங்கிக் கொள்வதாய்..
தக்க சன்மானம் செய்வதாய்..
தன் வாய் கூசாமல்..
நெஞ்சம் வருந்தாமல்
வார்த்தைகளை தொடர்ந்தான்!

கதிரவன் வர கீழ் வானம்
காத்திருக்க..
கண் இமைக்கும் நேரத்தில்..
அவள் கரங்களில்.. கதிரருவாள்கள்..
மண்ணில் அவன் மண்டையில்லா
முண்டம் கிடந்தது!

மண்ணுக்கு நீதி மீட்டுத் தந்தவள்..
மரத்தடியில்
மண் காத்த "மண் காத்தாளாய்"
மண்ணாத்தாளாய்..
மரச்சிலையாய் நிற்கிறாள் நிலா!

அந்த மண் கொண்டாடும்
சுதந்திர தினமெல்லாம்..
மண்ணாத்தாள்
மண் காத்த தினம் தான்!

கருவெளி ராச.மகேந்திரன்

அவள் கரங்களில்
விடியல் தந்த கதிரருவாள்
காலடியெல்லாம்.. காணிக்கையாய்..
கதிரருவாள்கள்!

அவளுக்குப் பிடித்த நிலவோடு
அவள் கதை.. சொல்வர்
அன்னையெரெல்லாம்..
அவர் தம் குழந்தைகளுக்கு!
அவள் புகுந்த மண்ணிலும்
பிறந்த மண்ணிலும்!

மண்ணாத்தாள் போன்றே பல ஆத்தாக்கள் வாழ்ந்ததும் வாழ்வித்ததும் வாழ்வதுமான
இப்பூமியை சுழலும் பூமியின் ஒற்றை உறவான நிலவோடு

மீண்டும்

நிலவும் நீயும் நானும் - தொகுப்பு 5 ல் சந்திப்போம்

கல்விக்கு உதவலாமே!

அன்புடையீர்,

உங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த வணக்கங்களும் வாழ்த்துக்களும். தொடர்ந்து வாசித்து ஆதரவளித்து வருவதற்கு நன்றி.

இந்த வார்த்தைக் கோர்வைகள் உங்களுக்கு பிடித்திருந்தால்..

உங்களிடம் ஒரு விண்ணப்பத்தை வைக்கிறேன், அது மிகவும் முக்கியமானது மற்றும் அவசியமானது. இன்றைய சூழலில் கல்வியின் அவசியத்தை நீங்கள் நன்கு அறிவீர்கள். தற்சமயம் இந்த வரிகளை நான் எழுதி முடிப்பதை சாத்தியப்படுத்தியதும், நீங்கள் வாசித்துக் கொண்டிருப்பதற்கும் அதுவே காரணம், அத்தகைய அடிப்படை பலன் அனைவருக்கும் கிடைத்திட வேண்டுமென நீங்கள் கருதினால்..

- **குறைந்தது ஏதேனும் ஒரு அரசுப்பள்ளி மாணவனுக்கோ / மாணவிக்கோ அவர்கள் படிப்புக்கு ஏதேனும் ஒரு வகையில் உதவிடுங்கள்**
- **ஏதேனும் ஒரு ஏழை மாணவனுக்கோ / மாணவிக்கோ கல்லூரியில் படிக்க உதவிடுங்கள்**
- **உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அரசுப்பள்ளி மாணவ – மாணவியருக்கு ஏதேனும் ஒரு வகையில் வழிகாட்டிடுங்கள்**
- **அரசுப் பள்ளிகள் மேலும் சிறப்பாக செயல்பட எந்த வகையிலேனும் உதவிடுங்கள்**

மேற்கூறிய வேண்டுகோள்கள் நிறைவேற்றப்பட வேண்டியவை எனக் கருதினால் தொடர்ந்து பலரிடமும் இந்த வேண்டுகோளை நீங்களும் பகிர்ந்து கொள்ளுங்கள்!

படைப்புகள் பற்றிய உங்கள் கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் எண்ணங்கள் என்னை வந்து சேர இந்த மின்னஞ்சல் முகவரியை பயன்படுத்தவும்.

karuveli.mahendran@gmail.com

தங்கள் ஆதரவுக்கு மீண்டும் நன்றி!

அன்புடன்

கருவெளி ராச.மகேந்திரன்

இணைந்திருக்க சில வழிகள் :

https://www.karuveli.wordpress.com | **மின்னஞ்சல்** : karuveli.mahendran@gmail.com

கைபேசி எண் : 94455 28556 | **படைப்புகளை உங்கள் மின்னஞ்சலில் பெற்றிட ஒரு முறை பதிவு செய்து கொண்டால் போதுமானது.** https://goo.gl/LC2dTD

யூ- டியூப் சேனல்கள்:

கருவெளி : https://goo.gl/pSYy8Y

ஊமைகளின் குரல் : https://goo.gl/qXn34p

மீயுசிக்கா : https://goo.gl/v33JY9

உதவிட விரும்பினால்:

நீங்கள் உதவ விரும்பியும் உங்களால் சரியான மாணவரையோ, பள்ளியையோ, தேவைப்படும் நபர்களையோ கண்டறிய இயலாமல் போனால் என்னைத் தொடர்பு கொள்ளவும். என்னால் இயன்றவரை என்னிடமுள்ள தகவல்களை பகிர்கிறேன்.

விலையின்றி அனைவரும் படிக்கவும் பகிரவும் வழிவகுக்கும் "**கிரியேட்டிவ் காமன்ஸ்**" உரிமம் மூலமாக தொடர்ந்து பல படைப்புகளை வெளியிடும் இந்த முயற்சிக்காக நீங்கள் உங்கள் பங்களிப்பை செய்திட விரும்பினால், எனது வங்கிக் கணக்கு விபரங்களை பின்வரும் முகவரியில் பெற்றிடுங்கள். இது, **முழுவதும் உங்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் செய்யப்படும் பங்களிப்பாக இருக்க வேண்டும் என்பது எனது மனமார்ந்த வேண்டுகோள்.** *நேர் வழியில் / நியாயமான முறையில் சம்பாதிக்காத பணம் எதையும் அனுப்ப வேண்டாம் என்றும் வேண்டிக் கொள்கிறேன்.*

நன்கொடையளிக்க விரும்புவோர் **இங்கே சொடுக்கவும்**

அல்லது இந்த முகவரியை பயன்படுத்துங்கள் http://bit.ly/Donate2Karuveli

அன்புடனும் வாழ்த்துகளுடனும்

கருவெளி ராச. மகேந்திரன்

என்னைப் பற்றி

மேற்குத் தொடர்ச்சி மலையின் பிரமாண்டத்தை தினந்தோறும் இரசிக்க வாய்ப்பிருக்கும், இவ்வுயிர் அழிந்தால் ஐந்தாறு ஆண்டுகளில் மனித இனம் அழிந்து போகுமென்ற புகழ் பெற்ற உயிரின் பெயர் கொண்ட “தேனி”யில் வாழ்ந்து கொண்டிருக்கும் எனக்கு பெற்றோரால் வைக்கப்பட்ட பெயர் மகேந்திரன். எனக்கு விபரம் தெரிந்து, என் தேடல் துவங்கிய நாள் முதலாய், எனது எழுத்துகள் மூலம் நான் பதிவு செய்யத் துவங்கிய நாள் முதலாய் கரு = ஆதியானது, வெளி = எல்லையற்றது, என்ற இரு சொற்களை இணைத்து “கருவெளி” அத்துடன் என் பெற்றோர் பெயரின் முதல் எழுத்துக்களை இணைத்து “கருவெளி” ராச. மகேந்திரன் என்ற பெயரில் எழுதி வருகிறேன்.

ஏறக்குறைய 15 ஆண்டுகள் காற்றாலை நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறை, செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மேலாண்மை துறைகளில், பல்வேறு மட்டங்களில் பணியாற்றி விட்டு தற்சமயம் முழு நேரம் எழுத்துப் பணியோடு, கிராமப்புற மாணவ மாணவியர், அரசுப்பள்ளி ஆசிரியப் பெருமக்களுக்கு என்னாலான அறிவுப்பகிர்வைச் செய்து கொண்டிருக்கிறேன்.

மிகச் சமீபத்தில் கற்றுக் கொண்ட ஒலி, ஒளி மற்றும் இசை சம்பந்தமான அறிவினை சமூகத்திற்கு பயனளிக்கும் வகையில் பல வடிவங்களில் கொண்டு வரும் முயற்சியை துவங்கி உள்ளேன். தற்சமயம் அதனை மக்களிடம் கொண்டு சேர்க்க, கவிதைகள் அனுபவப் பகிர்வுகளுக்காக “கருவெளி ராச.மகேந்திரன்”, பொது மக்களுக்குப் பயன்படும் அரசு மற்றும் அரசு சார் தகவல்களை பகிர்ந்திட “ஊமைகளின் குரல்” மற்றும் இசைக்காக “மியூசிக்கா” எனும் மூன்று யூடியூப் சேனல்களையும் ஆரம்பித்து தகவல்களை பரிமாறி வருகிறேன்.

மேலும் பல முயற்சிகளை சமூக பங்களிக்கும் வகையில் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பேன் என்ற நம்பிக்கையுடன் இயற்கையோடு என் வாழ்க்கை பயணம் தொடர்கிறது. உங்களைப் போலவே என்னைப் பற்றி நானும் அறிந்து கொள்ள நிறைய விசயங்கள் இருக்கின்றன. வாருங்கள் தொடர்ந்து பயணிப்போம்

அன்புடன் - கருவெளி ராச.மகேந்திரன்

எனது சில படைப்புகள்: (பிப்ரவரி 2019 நிலவரப்படி)

இதுவரை :

அமேசானில் கிடைக்கக்கூடிய தலைப்புகள்

1. நாலு சொல்லில் - தொகுப்பு 1 (தமிழ் எழுத்துலகில் ஒரு புதிய முயற்சி)
2. நாலு சொல்லில் - தொகுப்பு 2 (தமிழ் எழுத்துலகில் ஒரு புதிய முயற்சி)
3. நிலவும் நீயும் நானும் - தொகுப்பு 1 | கவிதைத் தொகுப்பு
4. நிலவும் நீயும் நானும் - தொகுப்பு 2 | கவிதைத் தொகுப்பு
5. கண்களை மூடிப்பார் | கவிதைத் தொகுப்பு (தியான அனுபவம் பற்றியது)

இலவசமாக வெளியிடப்பட்டுள்ள தலைப்புகள்

1. கண்களை மூடிப்பார் | கவிதைத் தொகுப்பு (தியான அனுபவம் பற்றியது)
2. என் மரணம் - சிறுகதை | உண்மைச் சம்பவம்
3. மக்களாட்சியில் என் கடைசிப் பயணம் - சிறுகதை | உண்மைச் சம்பவம்
4. குற்றால வலி(ழி) - சிறுகதை | உண்மைச் சம்பவம்
5. தீட்டு - சிறுகதை | உண்மைச் சம்பவம்
6. நிலவும் நீயும் நானும் - தொகுப்பு 3 | கவிதைத் தொகுப்பு
7. அவளோடு ஒரு பயணம் - கவிதைத் தொகுப்பு (மீ டூ)
8. நிலவும் நீயும் நானும் - தொகுப்பு 4 | கவிதைத் தொகுப்பு

தற்போது எழுதிக் கொண்டிருப்பவை :

1. மரணப் பிடியிலிருந்து - சிறுகதைகள் - 2019
2. நிலவும் நீயும் நானும் - தொகுப்பு 5 | கவிதைத் தொகுப்பு - 2019
3. அவனோடு ஒரு பயணம் - கவிதைத் தொகுப்பு - 2019
4. பாட்டில்க்காரன் | குறுங்கதை -2019
5. இராக்காவலன் | சிறுகதை -2019

(2019ல் மட்டும் குறைந்தது 12 வெளியீடுகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது)

ஒலிப் புத்தகங்கள் :

1. நாலு சொல்லில் - ஒலிப் புத்தகம் பகுதி 1 - நவம்பர் 2018 (மறு வெளியீடு)
2. நாலு சொல்லில் - ஒலிப் புத்தகம் - டிசம்பர் 2018 (மறு வெளியீடு)

காணொளிக் கவிதைகள் :

1. நாலு சொல்லில் - முழுத் தொகுப்பு (யூடியூப் சேனலில் உள்ளது)
2. நிலவும் நீயும் நானும் - தொகுப்புகள் 1,2,3… என அனைத்தும் விரைவில் நீங்கள் கேட்டு மகிழ வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளன
3. கண்களை மூடிப் பார் - புத்தகமும் என்னுடைய அனுபவப் பகிர்வுடன் விரைவில் வெளியிடப்படும்.

இசை வெளியீடுகள் :

1. Where I am Going - **ஏப்ரல்** 2018
2. EDM 1.0 - **ஜீன்** 2018
3. So Easy - **அக்டோபர்** 2018
4. Protect Me - **நவம்பர்** 2018
5. The Inner Journey - Series - **டிசம்பர்** 2018
6. The Restless
7. The Nameless Series - 2019 Weekly Music Series (வாரம் ஒரு இசைக் கோர்வையை கேட்டு மகிழுங்கள்) - வெற்றிகரமான ஆறு வாரங்களை கடந்து பயணிக்கிறது

புதிய நம்பிக்கைத் தொடர் :

அனைவருக்கும் பயன்படும் வகையில் "நீஉமுமூ" / "NUMM" எனும் புதிய நம்பிக்கைத் தொடர் காணொளித் தொடராக துவங்கப்பட்டுள்ளது. இது மும்மைத் தத்துவத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை அத்தனையும் நடைமுறை வாழ்க்கையின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. மாதத்திற்கு இரு காணொளிகள் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலவச பயிற்சி வகுப்புகள்

வாழ்வின் பல்வேறு நிலைகளிலிருக்கும் மக்களுக்கான பயிற்சி வகுப்புகள் தேனியில் துவங்கப்பட்டுள்ளன. இதுவரை **60 பயிற்சிகள்** பட்டியலிடப்பட்டுள்ளன. விரைவில் இது குறித்த மேலும் அறிய. http://bit.ly/KKtraining

மக்களாட்சியில் மக்கள் விழிப்புணர்வு, பங்கேற்ப்பு

நம் தலை எழுத்தை நாம் தான் தினந்தோறும் எழுதிக் கொண்டிருக்கிறோம் இந்த மக்களாட்சியில் அதனை மக்கள் உணர்ந்து அதில் பெறும் பங்களிப்பு செய்யும் விதமாக **"தேனி 360"**, திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் படி வரும் 2030க்குள் தேனி மாவட்ட்த்தில் மட்டும் சுமார் நான்கு லட்சம் பேருக்கு பயிற்சியளிக்கத் திட்டமிட்டுள்ளேன். அதுவும் பயிற்சி பெற்ற அனைவரும் அவரவர் கிராம, நகர, மாநகர பஞ்சாயத்தின் ஆண்டு வருமானம் மற்றும் செலவு விபரங்களே தாங்களே அறிந்து பயன்படுத்துவதற்கான திறன் பெற்றவர்களாக இருப்பார்கள். இது தவிர 60 பயிற்சிகளும் பட்டியலிடப்பட்டுள்ளன. இத்திட்டம் "தமிழ்நாடு 360" மற்றும் "இந்திய ஒன்றியம் 360" என விரிவாக்கம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. தேனியில் பயிற்சி வகுப்புகள் துவங்கி விட்டன. பல பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்த்தில் இணைந்து செயலாற்ற விரும்பும் அனைவரையும் அன்போடு வரவேற்கிறேன். மேலும் பல விபரங்களோடு உங்களை சந்திக்கிறேன்.

இங்கு பட்டியலிடா பல பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

கருவெளி ராச.மகேந்திரன்



அன்புடையீர்

“நிலவும் நீயும் நானும்” முதல் பாகம் எழுதத் துவங்கிய அன்று நான் கற்பனை செய்து கூடப்பார்க்கவில்லை நிலவுடனான பயணம் ஒரு முடிவிலியாகுமென்று. மற்ற படைப்புகளில் இருக்கும் மிகப்பெரிய கருத்தியல் தாக்கங்களிலிருந்து என்னை நானே மீட்டெடுக்க உதவுமென்று நம்பித் துவங்கிய ஒரு மென்மையான தலைப்பைப் போன்றே முதலில் காட்சியளித்தாலும்; நிலவும், நீங்களும், நானும் செய்த மாயங்களை என்னால் ஒவ்வொரு கவிதை தொகுப்பிலும் காண முடிகிறது.

“நிலவும் நீயும் நானும்” — தொகுப்புகளில் வைக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை கவிதை வாசிக்கும் பழக்கமுடையோருக்கு ஆரம்பத்தில் ஒரு வித்தியாசமான உணர்வையும் எண்ணத்தையும் ஏற்படுத்தி இருக்கலாம். ஒவ்வொரு தொகுப்பாய் படிக்கும் போது அந்த எச்சரிக்கைக்கான காரணம் உங்களுக்கு தானே விளங்கி இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

நான்காவது தொகுப்பாக வெளிவரும் இந்தப் படைப்பு உங்களை புதுப் புது தளங்களுக்கு அழைத்துச் செல்லும் என்பதில் முழு நம்பிக்கை உண்டு எனக்கு. இடங்கள், இனங்கள், மொழிகள் மாறினாலும் உலகெங்கும் ஓர் ஒற்றுமை நிலவிக் கொண்டிருப்பதை பல்வேறு தளங்களுக்கு அழைத்துச் சென்று அறிமுகம் செய்யும் பணியை ஒவ்வொரு கவிதையும் செய்யும் என்றே நம்புகிறேன். சாந்தினி முதல் மண்ணாத்தாள் வரை, கவி நிலவன் முதல் மதிமாறான் வரை, வெண்ணிலா பாட்டியும், குட்டிக் கண்ணம்மாவும், குட்டி நிலாக்களும் உங்களுக்காக உங்களோடு உறவாட காத்திருக்கிறார்கள் இந்த தொகுப்பில்.

படைப்புகள் வெறும் கற்பனைகளாய் இருப்பதில் எனக்கு உடன்பாடில்லை அதனை ஒவ்வொரு கவிதையிலும் நீங்கள் கண்டு கொள்வீர்கள். அதில் வரும் நிலாவாகவோ, கண்ணம்மாகவோ, வெண்ணிலா பாட்டியாகவோ, மதியாகவோ, கவினாகவோ, அவர்களின் உறவுகளாகவோ நீங்கள் இருக்கலாம். அப்பிரதிபலிப்பு நிகழ்ந்து விட்டால் நான் எழுதுவதை தொடர்ந்து செய்யலாம், இல்லையேல் நிறுத்திக் கொள்வது உத்தமம் என்றே கருதுகிறேன். குறைந்தது அவ்வாறு எழுதுவதற்கான பயிற்களை துவங்கலாமென்று நிறைகிறேன்.

நான்காம் பாகம் இந்த நாளில் வெளியிடப் படுவதற்கு முக்கியக் காரணம் ஏதுமுண்டா? இக்கேள்விக்கான பதில், கவிதைகளெங்கும் பரவிக் கிடக்கிறது என்பதே என் பதில்.

நான்காம் பாகத்தை வாசித்து விட்டு உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளுங்கள், அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். விரைவில் ஐந்தாம் பாகத்தில் சந்திக்கிறேன்.

தொடர்ந்து பயணிப்போம்…
கருவெளி ராச.மகேந்திரன்

கருவெளி கலையகம் வெளியீடு | 94455 28556